விலை: 30.00
பக்கங்கள் : 16
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 202 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 25 சனிக்கிழமை (09.07.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=



## ஜப்பான் முன்னாள் பிரதமர் சுட்டுப் படுகொலை

அரசியல் தலைவர்கள் இரங்கல்

09ஆம் பக்கம் பார்க்க

## கோட்டா - ரணில் அரசை பதவி விலகக்கோரி ஆயிரக்கணக்கான மாணவர்கள் போராட்டம்

### கண்ணீர்ப்புகை, நீர்த்தாரை பிரயோகம்

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை உடனடியாக பதவி விலகு மாறு கோரி ஆயிரக் கணக்கான மாண 15



## கோட்டா பதவி விலகாவிட்டால்

# கலவரங்கள் வெடிக்கலாம்!

### நாடு முழுவதும் இன்று பாரிய ஆர்ப்பாட்டங்களுக்கு ஏற்பாடு

*(கொழும்பு)* ஜனாதிபதி கோட்டா பதவியிலிருந்து விலகாவிட்டால் நாடு முழுவதும் கலவரங்கள் வெடிக்கும் அபாயம் உருவாகியுள்ளது. மேலும் ஜனாதிபதி மற்றும் அவர் தலைமையிலான அரசை பதவி விலக நாடு முழுவதும் இன்று பாரிய ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

*(15ஆம் பக்கம் பார்க்க)*

## எரிபொருள் வரிசையில் மோதல்

### ஒருவர் உயிரிழப்பு

(காலி)

எரிபொருள் வரிசையில் இரு குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலில் ஒருவர் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் 15

ஊரடங்கு உத்தரவு

## சட்டத்துக்கு முரணானது

### சட்டத்தரணிகள் சங்கம்

(கொழும்பு)

நாட்டில் தற்போது பிறப்பிக்கப்பட்டுள்ள பொலிஸ் ஊரடங்கு உத்தரவு சட்ட விரோதமானது மற்றும் அடிப்படை 15

## அமைதியான எதிர்ப்பாளர்களுக்கு பாதுகாப்பை வழங்குங்கள்



### இராணுவம், பொலிஸாருக்கு அமெரிக்கத் தூதுவர் வலியுறுத்து

(கொழும்பு)

வன்முறை ஒருபோதும் தீர்வாக அமையாது எனவும் போராட்டம் நடத்தப் போகிறீர்கள் என்றால், அமைதியான முறையில் போராட்டத்தை நடத்துமாறும் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரி 15

## ஆர்ப்பாட்டங்கள் வன்முறையானால்

### கடுமையான நடவடிக்கை பொலிஸ் பேச்சாளர்



(கொழும்பு)

ஆர்ப்பாட்டங்கள் வன்முறைகளாக மாறினால் பொலிஸார் நடவடிக்கை எடுப்பார்கள் என பொலிஸ் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித் 15

## மேல் மாகாணத்தில் மறுஅறிவித்தல்வரை

### பொலிஸ் ஊரடங்கு அமுல்

(கொழும்பு)

மேல் மாகாணத்தின் 7 பிரதேசங்களில் நேற்று இரவு 9 மணி முதல் மறு அறிவித்தல் வரை பொலிஸ் ஊரடங்கு உத்தரவு நடைமுறைப்படுத் தப்பட்டுள்ளது.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் அறிக்கை ஒன்றின் 15

கோட்டா பதவி துறக்க வேண்டும்

## பௌத்த மகா சங்கத்தினரால் 'செங்கடகல' பிரகடனம் வெளியீடு

(கண்டி)

அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டும் என்பதனை வலியுறுத்தும் 'செங்கடகல' பிரகடனம் நேற்று வெளியிடப்பட்டது.

மகாநாயக்க தேரர்கள், மகா சங்கத்தினர் மற்றும் சர்வ மதத் தலைவர்களின் ஆசியுடன் கண்டியில் நேற்று மாலை 4 மணிக்கு குறித்த பிரகடனம் வெளியிடப்பட்டது.

சர்வகட்சி அரசாங்கம் ஒன்றினை ஸ்தாபிப்பதற்கு ஒத்துழைப்பு 15

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் விநியோகத்தை இடைநிறுத்தியது ஐஓசி

நாட்டிலுள்ள லங்கா ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கான எரிபொருள் விநியோகத்தை நிறுத்தியுள்ளதாக லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் தெரிவிக்கையில்,

லங்கா ஐ.ஓ.சி. நிறுவனத்தின் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருளை விநியோகிப்பதனை இன்று பாதுகாப்புக் காரணங்களுக்காக இடைநிறுத்த தீர்மானித்துள்ளோம்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் அனைத்து தொழிற்சாலைகளுக்கும் தொடர்ந்து எரிபொருள் விநியோகம் இடம்பெறும்.

இருப்பினும், திங்கட்கிழமை முதல் மீண்டும் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருள் விநியோகம் ஆரம்பிக்கப்படும் என நிறுவனத்தின் பேச்சாளர் ஒருவர் மேலும் தெரிவித்துள்ளார்.(ம-7)

# பாடசாலைகளுக்கான விடுமுறை நீடிப்பு

## உத்தியோகபூர்வ அறிவிப்பு இன்று

நாட்டில் உள்ள பாடசாலைகளுக்கு தற்போது வழங்கப்பட்டுள்ள விடுமுறை மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, எதிர்வரும் ஜூலை மாதம் 18ஆம் திகதி முதல் பாடசாலைகளை மீளவும் ஆரம்பித்து நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை ஆசிரியர் சேவைகள் சங்கத்தின் செயலாளர் மகிந்த ஜயசிங்க இது தொடர்பான அறிவித்தலை வெளியிட்டுள்ளார்.

எரிபொருள் நெருக்கடி காரணமாக கடந்த வாரமும் பாடசாலைகள் மூடப்பட்டிருந்தன.

கல்வி அமைச்சின் அதிகாரிகளுக்கும் ஆசிரிய தொழிற்சங்க கூட்டமைப்பிற்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இந்த தீர்மானம் எட்டப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சின் உத்தியோகபூர்வ அறிவிப்பு இன்று வெளியிடப்படும் என தெரிவிக்கப்படுகிறது. (ம-7)


## வடக்கில் உள்ள இளைஞர், யுவதிகளுக்கு அரியதொரு சந்தர்ப்பம் வழங்குகின்றார் இந்து பௌத்த கலாசார பேரவையின் செயலாளர் M.T.S. இராமச்சந்திரன்

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துடன் இணைந்து ஆங்கில மொழியானது 3 அல்லது 6 மாத காலங்கள் இலவசமாக கற்பிக்கப்படும்.

- இந்து பௌத்த கலாசார பேரவையில் அங்கத்தவராக இணைந்தவர்களுக்கு கற்கை நெறியானது முற்றிலும் இலவசம்.
- வயதெல்லை 18 - 45
- ஆண். பெண் இருபாலாரும் கலந்து கொள்ளலாம்.
- அவரவர் பிரதேச எல்லைக்குள் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் வகுப்புக்கள் இடம்பெறும்.
- ஆரம்ப ஆங்கில அறிவு தெரிந்தவர்களுக்கு பேச்சுப்பயிற்சி. எழுத்துப் பயிற்சி வழங்கப்படும்.
- அரச வேலைவாய்ப்பு பணியகத்தினால் நேர்முகப்பரீட்சை மற்றும் தொழிற்பயிற்சி நடைபெறுவதற்கான ஒழுங்குகள் இந்து பௌத்த கலாசார பேரவையின் பொதுச் செயலாளர் திரு.M.T.S. இராமச்சந்திரனின் வழிநடத்தலில் நடைபெறும்.

**இன்றைய நாட்டு சூழ்நிலை கருதி ஐரோப்பாவிலும் கிழக்கு ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் தென்மேற்கு ஆசியாவிலும் சில நாடுகள் இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதற்கு முன்வந்துள்ளன. இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்துமாறு வட மாகாணத்தில் உள்ள இளைஞர், யுவதிகளை அன்புடன் அழைக்கின்றோம்.**

தொடர்புகளுக்கு:-
**இந்து பௌத்த கலாசார பேரவை**
**தலைமைக் காரியாலயம்**
யாழ்ப்பாணம்
021 223 2072
077 271 1181
வவுனியா
077 901 9814

(12033)


## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலகத்தில் திட்டமிடல் கிளையில் கடமையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு **மா. கனகராஜ்** அவர்களின் பாசமிகு தந்தையார்

அமரர் **சபாபதிப்பிள்ளை மாணிக்கம்**

அவர்கள் 08.07.2022 அன்று காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்.

தோற்றம் 15.01.1940 மறைவு 08.07.2022

துயர் பகிர்வில்...
**பிரதேச செயலாளரும் அனைத்து உத்தியோகத்தர்களும்**
**ஊழியர் நலன்புரிச் சங்கம்,**
**பிரதேச செயலகம், பருத்தித்துறை.**

(C-4586)

# மரண அறிவித்தல்



### திருமுருகமாமணி, கலைவாருதி, சிவத்திரு

## காசிப்பிள்ளை ஆறுமுகம் தியாகராசா (நயினாதீவு)

**(முன்னாள் தலைவர், மரபுவழி அறங்காவலர் - நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், ஓய்வுநிலை உதவி அரசாங்க அதிபர், தீவகம் தெற்கு, வேலணை)**

அன்னையின் மடியில்:- 25.02.1938 | அம்பிகை அடியில்:- 07.07.2022

*நயினாதீவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் நயினாதீவு 5ம் வட்டாரம், இல.58/9, செட்டித்தெரு, நல்லூர் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட காசிப்பிள்ளை ஆறுமுகம் தியாகராசா அவர்கள் கடந்த 07.07.2022 வியாழக்கிழமை இறைபதம் எய்தினார்.*

*அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - வடிவாம்பிகை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கனகசபை - திலகவதி தம்பதியரின் அன்பு மருமகனும் நல்லம்மாவின் பாசமிகு கணவரும் திரிபுரசுந்தரி, சுரமஞ்சரி, இளங்குமரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ரவிபாலன், சுதாகரன், பூங்குழலி ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற நிஷானி மற்றும் துவாரகன், லாவண்யன், ரமணன், ஆதிர்ஷண், இமாலயா, ஆலயன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான நடராசா, பூம்பாவை மற்றும் உமாதேவி, நவரெத்தினராசா, காலஞ்சென்றவர்களான சாந்தநாயகி, வாகீஸ்வரன் மற்றும் உமாதேவன், அஸ்தநாயகி, சுவாதிநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரரும் நாகலெட்சுமி, காலஞ்சென்றவர்களான சாந்தலிங்கம், சரவணமுத்து, சரஸ்வதி மற்றும் சண்முகரெத்தினம், இந்திராணி, தேவிகா, ஸ்ரீபதிநாதன், சுதாகரன், காலஞ்சென்ற நற்குணசிங்கம் மற்றும் நாகலெட்சுமி, புஸ்பவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் பேரின்பநாயகி, காலஞ்சென்ற சிவசோதி மற்றும் ஜெயபாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (10.07.2022) ஞாயிற்றுக் கிழமை காலை 7 மணிக்கு இல.58/9, செட்டித்தெரு, நல்லூரில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நயினாதீவுக்கு எடுத்துச் செல்லப்பட்டு பிற்பகல் 2 மணியளவில் நயினாதீவு சல்லிவரவை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.*

*இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.*

இல.58/9,
செட்டித்தெரு, நல்லூர்.

(12090)

*தகவல்:*
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளை நிறைவேற்ற அமெரிக்கா தயார்

## அமெ.தூதுவர் ஜூலி சங் தெரிவிப்பு

(கொழும்பு)

**வரிசையில் நிற்பது அரசாங்கமோ அமைச்சர்களோ இல்லை பொதுமக்களே. எனவே பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளை நிறைவேற்ற அமெரிக்கா தயாராக உள்ளது.**



இலங்கைக்கு உதவிகளை வழங்குவதற்காக, சில நாடுகள், இலங்கையில் மாற்று அரசாங்கம் வரும் வரை காத்திருப்பதாக கூறப்படுவது தவறானது என இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

தனது இல்லத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் குழுவுடன், நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு உதவிகள் தேவைப்படும் இந்த நேரத்தில் சர்வதேச சமூகம், உதவிகளை நிறுத்துவதாக தவறான தகவல் வெளியாகி இருப்பதாக தூதுவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை மக்களுக்கு அமெரிக்கா ஆதரவளிக்கிறது. ஜனாதிபதி நாற்காலி அல்லது பிரதமர் நாற்காலியில் யார் அமர்கிறார்கள் என்பதைப் பொறுத்தே தமது ஆதரவு அமையாது என்றும் அவர் கூறினார்.

எரிபொருள் வரிசையில் நிற்பது அரசாங்கமோ அமைச்சர்களோ அல்ல.

எனவே பாதிக்கப்படக்கூடிய மக்களின் தேவைகளை நிவர்த்தி செய்வதே தங்களின் கடமை என்றும் அவர் கூறினார்.

அமெரிக்கா தனிநபரையோ, தனிக் கட்சியையோ அல்லது அரசியல்வாதியையோ ஆதரிப்பதில்லை. இலங்கை மக்களுக்கு ஆதரவளிக்க விரும்புகிறது.

பொருளாதார நெருக்கடியைப் பற்றிக் குறிப்பிடுகையில், கடன் மறுசீரமைப்புத் தேவைகள் உள்ள ஒரு நாட்டிற்கு எந்தவொரு சர்வதேச வங்கியும் அல்லது அரசாங்கமும் கடன் வழங்காது என்பதால், சர்வதேச நாணய நிதியம் மாத்திரமே இலங்கைக்கான ஒரே வழி எனவும் அவர் தெரிவித்தார். (4)

# வங்கிகளில் கடன் பெற்றவர்களுக்கு சலுகைகள் அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கையிலுள்ள வங்கிகளில் கடன் பெற்றவர்களுக்கு சலுகை வழங்கப்படுவது தொடர்பில் முக்கிய உத்தரவொன்று இலங்கை மத்திய வங்கியால் அனைத்து வங்கிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் வங்கிக் கடன்களை செலுத்த முடியாதுள்ள வாடிக்கையாளர்களுக்கு சலுகைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு மத்திய வங்கி தீர்மானித்துள்ளது.

கொழும்பிலுள்ள மத்திய வங்கி தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்து மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை கடனை செலுத்த முடியாதவர்களுக்காக 6 மாதத்திற்கு இரு தடவைகளாக கடனை செலுத்துவதற்கான வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு மத்திய வங்கியினால், வங்கிகளுக்கு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க கடனை மீளச் செலுத்துவதற்கு ஆறு மாத கால சலுகை வழங்குவது, முறைப்படியான செயற்திட்டத்தின் மூலம் வங்கிக் கடனை அறவிடுவதற்கு வழங்கப்பட்டுள்ள காலத்தை நீடிப்பது மற்றும் செயற்படாத கடனை செலுத்தவுள்ளோரின் பட்டியலில் உள்ளோர் புதிய கடன்களை பெற்றுக் கொள்ளும் போது கடன் தகவல் பிரிவில் சலுகையுடனான மதிப்பீடுகளை மேற்கொள்வது தொடர்பிலும் மத்திய வங்கியினால் ஏனைய வங்கிகளுக்கு பணிப்புரைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் மத்திய வங்கி ஆளுநர் தெரிவித்துள்ளார். (4)

# கோட்டாபயவின் பதவி 12 ஆம் திகதி பறிபோகும்

## சிங்கள சோதிடர் தகவல்

(கொழும்பு)

எதிர்வரும் ஜூலை 12 ஆம் திகதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தனது பதவியை இழப்பார் என பிரபல சிங்கள சோதிடர் சரத் சந்திர என்பவர் தெரிவித்துள்ளார்.

இணைய சேவை ஒன்றில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் தற்போது நிலவும் நெருக்கடி நிலை சில நாட்களில் மிகவும் தீவிரமடையும்.

அத்துடன் இரத்தக்களரி மற்றும் உயிரிழப்புக்கள் ஏற்படலாம் என அவர் குறிப்பிட்டார். (4)

# அறுவடைக்கு தேவையான எரிபொருளை தாருங்கள்

## கல்மடு விவசாயிகள் கோரிக்கை

(தருமபுரம்)

கல்மடு குளத்தின் கீழ் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டிருக்கும் பல விவசாயிகள் தற்போது அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளதன் காரணமாக விரைவாக தமக்கு அறுவடைக்கான எரிபொருளை பெற்றுத்தர வேண்டும் என மாவட்ட அரசாங்க அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்பொழுது சிலரது வயல்கள் அறுவடை செய்ய வேண்டிய நிலையில் உள்ளன.

சில விவசாயிகளின் நெற்கதிர்கள் முற்றாக அழிந்து விடும் நிலை ஏற்படுவதற்கு முன்னர் எமக்கு எரிபொருள் வழங்க வேண்டும் எனவும் கடந்த காலங்களில் ஒரு ஏக்கர் பயிர்ச் செய்கை மேற்கொள்ள சாதாரணமாக ஏற்படும் பணச் செலவு தற்பொழுது பலமடங்கு அதிகரித்து வரும் நிலையில் தற்பொழுது அறுவடை செய்வதற்கு எரிபொருள் கிடைக்கப்பெறாததன் காரணத்தினால் பல ஆயிரம் ரூபாய்க்கு ஒரு ஏக்கர் அறுவடை செய்ய வேண்டிய நிலையிலுள்ளதாக தெரிவித்தனர்.

தற்பொழுது நாட்டின் அரிசிக்கான விலை பலமடங்கு அதிகரித்துவரும் நிலையில் அறுவடை செய்ய வேண்டிய விவசாயிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் விரைவாக எரிபொருள் பெற்றுத்தர சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் தெரிவித்தனர். (4-6-316)

# நாளை முதல் உர விநியோகம்

(கொழும்பு)

40,000 மெற்றிக் தொன் உரத்தை ஏற்றிய கப்பல் இன்று இரவு இலங்கையை வந்தடையவுள்ளது.

குறித்த கப்பலுக்கு மேலதிகமாக மேலும் 25,000 மெற்றிக் தொன் உரத்தை ஏற்றிய கப்பல் அடுத்த இரண்டு நாட்களில் இலங்கைக்கு வரவுள்ளது.

இதன்படி உரக்கப்பல்கள் வருகையின் பின்னர் நாளை முதல் உர விநியோகம் உடனடியாக ஆரம்பிக்கப்படும் என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. (4)

# திங்கள் முதல் ரயில் கட்டணம் அதிகரிப்பு

(கொழும்பு)

திங்கட்கிழமை நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் ரயில் கட்டணத்தை அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை அச்சிடுவதற்காக அரச அச்சக அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அரசாங்க அச்சக அதிகாரி கங்கானி லியனகே தெரிவித்துள்ளார்.

இதன்படி, ரயில் கட்டணத்தை தற்போதைய பேருந்து கட்டணத்தைவிட குறைவாக அதிகரிக்க முன்மொழியப்பட்டுள்ளதுடன், அதன்படி, குறைந்தபட்ச கட்டணம் பத்து அல்லது இருபது ரூபாயாக அதிகரிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாட்டின் நெருக்கடியை தீர்ப்பதற்கான அனைத்து திட்டங்களும் நிறைவு

## ஜனாதிபதி கோட்டா அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் பிரச்சினைகளை எதிர்வரும் நாட்களில் தீர்ப்பதற்கான அனைத்து திட்டங்களும் நிறைவடைந்துள்ளதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான கலந்துரையாடல் வெற்றியடைந்துள்ள நிலையில் எதிர்வரும் நாட்களில் அதனை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அத்துடன், பல்வேறு அரச தலைவர்கள் ஊடாக தொலைபேசி மூலமாகவும் சில நாடுகளின் தூதுவர்களுடனும் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து ஒத்துழைப்புகளை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன், அத்தியாவசிய மருந்துகள் தற்போது கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் இந்திய கடனுதவித் திட்டத்தின் கீழ் 44 ஆயிரம் மெட்ரிக் தொன் உரம் இன்றைய தினம் கிடைக்கப் பெறவுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் எரிபொருள், எரிவாயு மற்றும் அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய கப்பல்கள் எதிர்வரும் 12 ஆம் திகதி முதல் நாட்டை வந்தடையவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவிக்கின்றது.

நாட்டில் பல்வேறு விவசாய வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு உணவுப் பற்றாக் குறையொன்று ஏற்படாத வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனிடையே 21 ஆவது அரசியலமைப்பு திருத்தத்திற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாகவும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டின் அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வைப்பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் எதிர்க்கட்சிகள் அதனைக் குழப்புவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-7)


குருவே துணை

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



**வேதாத்திரி மகரிஷி அவர்கள் அருளிய மனவளக்கலை யோகா பயிற்சிகள்**

யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவிலில் ஆளுமை திறனூக்கப் பயிற்சிகள் இந்த ஆண்டு முழுவதும் இலவசமாக வழங்கப்பட்டுக் கொண்டு இருப்பதால் இந்த அரியவாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

* உடல் நலத்திற்கு → எளியமுறை உடற்பயிற்சிகள்
* உயிர் வளத்திற்கு → சித்தர்களின் வழிவந்த காயகல்ப பயிற்சி
* மன அமைதிக்கு → தியானப் பயிற்சிகள்
* அறிவு வல்லமைக்கு → அகத்தாய்வு பயிற்சிகள்
* உறவுகள் மேம்பட → தற்சோதனைப் பயிற்சிகள்

காலம் :- 09.07.2022 சனிக்கிழமை தொடக்கம் 15.07.2022 வெள்ளிக்கிழமை வரை

நேரம் :- மாலை 5.00 தொடக்கம் 7.00 மணிவரை

பயிற்சிகளை வழங்குபவர்கள்:- துணைப்பேராசிரியர் அருள்நிதி த.நந்தகுமரன் மற்றும் துணைப்பேராசிரியர் அருள்நிதி ந.ஜெயகிருஷ்ணா அவர்கள்

(C-4590)

தொடர்புகளுக்கு:- **யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்**

**இல.81, பிறவுண் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில், யாழ்ப்பாணம்.**

தொ.இல:- 021 222 2772, 076 857 1395, 077 123 5646, 071 440 3268, 077 736 8745



**வீடு வாடகைக்கு தேவை**

யாழ்.நகரை அண்மித்த பகுதியில் சிறிய குடும்பம் ஒன்று வ்சிக்கக்கூடிய சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்குத் தேவை. வீட்டை வாடகைக்கு வழங்கக் கூடியவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு:

**077 745 1625**


ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்



பிறப்பு 25 - 01 - 1951

இறப்பு 08 - 07 - 2022

### திருமதி செல்வராணி கதிரமலை

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசாவிளான், திருநெல்வேலி, கோண்டாவில் ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்வராணி கதிரமலை அவர்கள் நேற்று (08.07.2022) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவனடியார் - மகாலட்சுமி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற தம்பையா - பூலோகம் தம்பதிகளின் அன்பு மருமகளும் வசாவிளான் கதிரமலையின் அன்பு மனைவியும் தயாளினி, கணேசமூர்த்தி (பிரான்ஸ்), சிவகௌரி (ஆசிரியை - யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் சாந்தா, சரவணபவானந்தன், சத்தியநாதன் (மோகன் - கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சிவபாக்கியம் (சங்கானை) மற்றும் சிவக்கொழுந்து (பூநகரி) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

01ம் ஒழுங்கை,
இருபாலை வீதி, கோண்டாவில். (12094)

தகவல்: குடும்பத்தினர்
தொ.பே: 077 723 8597


सत्यमेव जयते

**இந்திய துணைத் தூதரகம் யாழ்ப்பாணம்**

**யோகா போதனாசிரியர் தேவை**

யாழ். இந்திய துணைத் தூதரகம் வட மாகாணத்தில் யோகப் பணிகளை முன்னெடுப்பதற்காக முழுநேர யோகா போதனாசிரியரை தற்காலிகமாக நியமனம் செய்யவுள்ளது. விண்ணப்பதாரிகளிடமிருந்து கீழ்வரும் தகுதிகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் யோகக்கலையில் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.
- 5 வருட முன்னனுபவம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.
- யோகா பயிற்சிகளை சரியாக அளிப்பதுடன் அரங்க ஆற்றுகையை நெறிப்படுத்துவதிலும் யோகக்கலை சார்ந்த பேச்சுத்திறன் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
- 30 வயதிற்கும் 45 வயதிற்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- தேக ஆரோக்கியமும் நன்நடத்தையும் மற்றும் சாரதி அனுமதிப்பத்திரமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

இப் பணியிடத்துக்கு தகுதி உள்ளவர்கள் விளம்பரம் வெளிவந்த 10 நாட்களுக்குள் புகைப்படம் ஒட்டிய சுய விபர விண்ணப்பம் மற்றும் சான்றிதழ்களுடன்

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி

**தலைமை அதிகாரி**
**இந்திய துணைத் தூதரகம்**
**இல.14, மருதடி வீதி, நல்லூர்,**
**யாழ்ப்பாணம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் பொருளாதார நெருக்கடி உலக நாடுகளுக்கு ஒரு எச்சரிக்கை

## ஐ.நா.தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையின் பொருளாதார நெருக்கடி உலக நாடுகளிற்கான ஒரு எச்சரிக்கை என ஐ.நா. தெரிவித்துள்ளது.

உக்ரைன் யுத்தம் நீடித்துக் கொள்கின்ற நிலையில் கொவிட் 19 பெருந்தொற்று காரணமாக ஏற்கனவே கடும் அழுத்தத்தின் கீழ் உள்ள நாடுகள் இலங்கை போன்று பொருளாதார நெருக்கயை எதிர்கொள்ளும் ஆபத்துள்ளது என ஐ.நா. குறிப்பிட்டுள்ளது.

கடனில் சிக்குண்டுள்ள நாடுகளிற்கு உதவுவதற்கு சர்வதேச சமூகம் தீவிரநிதி நடவடிக்கைகளை அறிமுகப்படுத்த வேண்டும் எனவும் ஐ.நா. வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கையில் தற்போது துன்பகரமான தொடர் நிகழ்வுகள் அரங்கேறிக்கொண்டிருப்பதை நாம் காண்கின்றோம்.

அது குறித்து சிந்திக்கும் எவருக்கும் அது எச்சரிக்கையாக விளங்க வேண்டும் என தெரிவித்துள்ள ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் நிர்வாகி அச்சிம் ஸ்டெய்னர் இதனை எவ்வாறு எதிர்கொள்வது என ஒவ்வொரு நாடும் தீர்மானிக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். (4)

# தனியார் பேருந்துகள் இன்று இயங்காது

(கொழும்பு)

மக்களின் தன்னெழுச்சி போராட்டம் காரணமாக இன்று சனிக்கிழமை எந்த பேருந்தும் இயக்கப்படாது என இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பொலிஸார் வீதிகளை மூடுகின்றமையினால் மாற்று வழிகளைப் பயன்படுத்துகின்றமை காரணமாக எரிபொருள் பாவனை அதிகரித்துள்ளது.

இதன் காரணமாகவே குறித்த தீர்மானத்தினை எடுத்துள்ளதாக தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

இன்று பேருந்துகளை இயக்க முடியாத நிலை ஏற்படும் எனவும், மக்கள் போராட்டத்திற்கு தமது தரப்பினர் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (4)

# இரத்ததான முகாம்

(குப்பிழான்)

நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயம் மீதான விமானக் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டோரின் 27 ஆவது ஆண்டு நினைவை முன்னிட்டு நவாலி சென்.பீற்றர்ஸ் இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் மாபெரும் இரத்ததான முகாம் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை மேற்படி தேவாலய முன்றலில் இடம்பெற உள்ளது.

மேற்படி இரத்ததான முகாம் நிகழ்வில் அனைத்துக் குருதிக் கொடையாளர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.(4-6-18)

# ஜனாதிபதியும் பிரதமரும் உடனடியாக பதவி விலகுங்கள்

## இலங்கை திருச்சபை கோரிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரை உடனடியாக பதவி விலகுமாறும் இலங்கை மக்கள் மற்றும் சர்வதேச சமூகத்தின் நம்பிக்கையை மீளப் பெறக் கூடிய உண்மையான பிரதி நிதித்துவ இடைக்கால நிர்வாகத்தை உருவாக்குமாறும் இலங்கைத் திருச் சபை கோரிக்கை விடுத்துள்ளது. இந்த விடயம் தொடர்பாக அந்தச் சபை அறிக்கையொன்றை விடுத்துள்ளது.

குறித்த அறிக்கையில், இந்த நாட்டை திவாலான நிலைக்கு கொண்டு சென்றதற்கு ஜனாதிபதி தனிப்பட்ட முறையில் பொறுப்பேற்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. தனிநபர் மீது மக்களுக்கு இன்னும் நம்பிக்கை இருந்தால் மட்டுமே ஒரு பதவிக் காலம் சட்ட பூர்வமானதாக இருக்கும் என்றும் மதத்தலைவர் களிடமிருந்தும் சிவில் சமூகத்தினரிடமும் தெருவில் இருக்கும் சராசரி ஆணும் பெண்ணும் அவர் இராஜினாமா செய்ய வேண்டும் என்ற பெரும் அழைப்பை விடுக்கின்றனர் என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவை அனைத்தும் இனி இந்த நாட்டை ஆள்வதற்கு அவருக்கு எந்த ஆணையும் இல்லை என்பதை தெளிவாக பிரதிபலிக்கிறது என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)


**அன்னை சிவத்தமிழ்ச்செல்வி, துர்க்காதுரந்தரி பண்டிதை கலாநிதி.தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் பதின்னான்காவது ஆண்டு குருபூசை வைபவம்**

அன்னை சிவத்தமிழ்ச்செல்வி, துர்க்காதுரந்தரி பண்டிதை கலாநிதி.தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் பதின்னான்காவது ஆண்டு குருபூசை வைபவம் இவ் வருடம் 10.07.2022 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் தேவஸ்தான தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் தலைமையில் காலை 9.00 மணியளவில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவில் மூத்த சிவாச்சாரியார்கள் கௌரவிக்கப்படவுள்ளார்கள்.

**கௌரவம் பெறும் சிவாச்சாரியார்கள்.**

01. சிவஸ்ரீ.கார்த்திகேயக்குருக்கள் துரைச்சாமிக்குருக்கள் அவர்கள்
02. பிரம்மஸ்ரீ. இரத்தினசபாபதிக்குருக்கள் குமாரசாமி சர்மா அவர்கள்
03. சிவஸ்ரீ.சிதம்பரநாதக்குருக்கள் தியாகராஜக்குருக்கள் அவர்கள்
04. சிவஸ்ரீ.முத்துக்குமாரசாமிகுருக்கள் கணேசக்குருக்கள் அவர்கள்

**கலாநிதி. ஆறு.திருமுருகன்**
**தலைவர்**
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.**

(c-4587)


# இராசிபலன்

09.07.2022
ஆனி 25, சனிக்கிழமை
தசமி பிற்பகல் 12.04 மணிவரை

சுவாதி முற்பகல் 7.38 மணிவரை
சுப நேரம் -2.58 - 4.28 மணிவரை
இராகு காலம் -8.58 - 10.28 மணிவரை

அமிர்த சித்தம்,
சந்திராஷ்டமம்- ரேவதி

**வளவன்**

**மேஷம்** – எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**கடகம்** – பெற்றோர் மீது பிரியம் கூடும், தொலை தூரத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், வருமானம் வரும் வழியில் நாட்டம் காட்டுவீர்கள்,போசன சுகமுண்டு.

**துலாம்** – சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், போசன சுகமுண்டு, கற்பனை மிகுதியான நாள்.

**மகரம்** – பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், தொலைபேசித்தகவல் மகிழ்ச்சி தரும்.

**ரிஷபம்** – பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரலாம், உடல் நலன் சீராகும், வருமானம் பெற வழிசமைத்துக் கொள்வீர்கள், கடன் சுமை குறைய வழிவகை செய்வீர்கள்.

**சிம்மம்** – நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள், நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**விருச்சிகம்** – எடுத்த காரியங்களில் சற்று அலைச்சல்கள் ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், உறவினர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சயன சுகக்குறைவான நாள்.

**கும்பம்** – வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், பிரியமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள், புதிய திட்டங்கள் கைகூடும்.

**மிதுனம்** – சான்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பெருமைகள் வந்து சேர கணபதியை வழிபட வேண்டிய நாள்.

**கன்னி** – எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், பணப்பழக்கம் அதிகரிக்கும் நாள், வார்த்தைகளில் நிதானம் தேவை, உடல் நலனில் முன்னேற்றம் காணும் நாள்.

**தனுசு** – புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**மீனம்** – குடும்பத்தினரிடையே கோபமாகப் பேசி விட்டு பின்னர் மனம் வருந்தும் நிலை ஏற்படலாம், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

உனது அன்பை அறிவென்னும் வேலிக்குள் உலாவ விடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். இந்துக் கல்லூரியின் திறன் மேம்பாட்டு மையம் திறப்பு விழா நேற்று முன்தினம் வியாழக்கிழமை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் பாடசாலை அதிபர் ரட்ணம் செந்தில்மாறன் தலைமையில் நடைபெற்றது. இதில் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் விருந்தினராகக் கலந்து கொண்டு திறன் மேம்பாட்டு மையத்தைச் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தார். (படம்-ரவிசாந்)

# இந்திய மீனவர்களின் அத்துமீறலை கண்டித்து யாழில் மீனவர்கள் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

**இந்திய மீனவர்களின் இழுவைப்படகுகள் அத்துமீறி இலங்கை கடற்பரப்புக்குள் வருவதையும் மீனவர்களின் உடமைகளை சேதமாக்குவதையும் கண்டித்து கவனயீர்ப்பு ஒன்று யாழில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.**

கடந்த காலங்களிலும் பல மீனவர்களின் பலகோடி ரூபாய் பெறுமதியிலான மீனவ உடமைகள் தேசதப் படுத்தப்பட்டுள்ளது.

இதற்காக இலங்கை மற்றும் இந்திய அரசாங் கத்தினால் இதுவரை நட்ட ஈடு கொடுக்கப்படவில்லை எனக் கோரி யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர்களின் சமாசங்களின் சம்மேள த்தின் ஏற்பாட்டில் நேற்று யாழ்.பொஸ்கோ பாடசாலை க்கு முன்பாக கவனயீர்ப்பு ஆரம்பமாகி,

யாழ் மருதடி லேனில் உள்ள யாழ்.இந்திய உத வித்துணைத்தூதரக அலு



வலகம் வரை சென்று போராட்டத்தில் ஈடுபட்ட னர்.

இதில் யாழ்.இந்திய உத வித் தூதரக அதிகாரி ஒரு வரிடம் 8 அம்ச கோரிக்கை அடங்கிய மகஜரினை யாழ். மாவட்ட கடற்றொழிலா ளர்களின் சமாசங்களின் சம்மேளனத்தின் தலைவர் அன்னலிங்கம் அன்னராசா கையளித்தார்.

இதில் யாழ்.மாவட்ட மீனவகடல்வள மீனவ சமூக பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண்டனர். (4-6-104)

## எரிபொருளுக்கான வரிசையில் நிற்கும் வாகனங்களை சேதமாக்கும் விஷமிகள்

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பகுதியில் எரிபொருளுக்காக நாள் கணக்கில் காத்திருந்த வாக னங்கள் சில சேதமடைந் திருப்பதாக வாகன உரிமை யாளர்கள் தெரிவித்துள்ள னர்.

வாகனங்களை வரிசை யில் நிறுத்திவிட்டு உணவு க்காக அல்லது வேறு தேவைகளுக்காக செல்லும் போது சில குழுவினர் வேண் டுமென்றே இவ்வாறு வாக னங்களை சேதப்படுத்து வதாகத் தெரிவிக்கப்படு கிறது. தென்மராட்சிப் பகுதி யில் எரிபொருள் வரிசையில் காத்திருக்கும் வாகனங் களின் உதிரிப்பாகங்கள் திருடப்படும் சம்பவங்கள் இடம்பெறும் அதேவேளை யில், கைகலப்பு சம்பவ ங்கள் பலவும் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்த க்கது.

இதனால் 5000 ரூபாய் க்கு எரிபொருள் பெற வந்து தாம் நாற்பதாயிரம் ரூபாய் வரை வாகனங்களை திருத்துவதற்கு செலவழிக்க வேண்டிய நிலை ஏற்படு வதாகவும் சாரதிகள் சுட்டிக் காட்டியிருந்தனர்.(4-6-30)

## அரங்கு திறப்பு விழாவும் நிறுவுனர் தினமும்

(அளவெட்டி)

அளவெட்டி அருணோ தயக் கல்லூரியின் ஒன்று கூடல் அரங்கு திறப்பு விழா வும் நிறுவுனர் தினமும். இன்று சனிக்கிழமை பிற் பகல் 1.30 மணி அள வில் கல்லூரி அரங்க மண் டபத்தில் கல்லூரி முதல்வர் நா.கேதீஸ்வரன் தலை மையில் இடம்பெறவுள் ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக. யாழ்.மாவட்ட செயலர் க.மகேசன் கலந்து கொள்ளவுள் ளார். (4-6-110)

## சித்தங்கேணியில் வீடுபுகுந்து 9 1/4 பவுண் நகை, பணம் களவு

(அராலி)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சித்தங் கேணி பகுதியில் உள்ள வீடு ஒன்றில் பணம், நகை என்பன களவாடப்பட்டுள் ளன.

குறித்த வீட்டில் வயோதி பர்கள் மூவர் மற்றும் உத வியாளர் வசித்து வந்த நிலையில் நேற்று முன் தினம் இரவு வீட்டுக்குள் நுழைந்த இரண்டு திருடர் கள் வீட்டில் இருந்த 700 ஸ்ரேலிங் பவுண்ஸ், 4 இலட்சத்து 20 ஆயிரம் ரூபா பணம் மற்றும் 9 1/4 பவுண் நகை என்பனவ ற்றை களவாடியுள்ளனர். வீட்டில் இருந்தவர்களை மிரட்டியே குறித்த களவு இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. வட்டுக்கோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின் றனர். (4-6-104)



லண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலய நிர்வாகத்தினால் மன்னார் திருக்கேதீச்சர நாதர் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகப் பெருவிழா நாளினை முன்னிட்டு கடந்த புதன்கிழமை புதிய உழவு இயந்திரம் ஆலயத்தின் பணிகளுக்காக நேரடியாகக் கையளிக்கப் பட்டது. (படம்:-ரவிசாந்)

## கொடிகாமத்தில் பதுக்கி வைத்திருந்த 150 லீற்றர் டீசல் மீட்பு

### இருவர் கைது

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மீசாலை மற்றும் மந்துவில் பகுதி களைச் சேர்ந்த இருவர் விற்பனை நோக்கில் டீசலை பதுக்கி வைத்திருந்த குற் றச்சாட்டில் கொடிகாமப் பொலிஸ் நிலைய புலனா ய்வுப் பிரிவால் நேற்று வியாழக்கிழமை இரவு கைது செய்யப்பட்டுள்ள னர்.

அல்லாரை தெற்கு மீசா லைப் பகுதியில் 59 வயது நபரொருவர் வீட்டில் பதுக்கி வைத்திருந்த 110லீற்றர் டீசல் மற்றும் மந்துவில் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த நபர் புத்தூர்ச்சந்திப் பகுதி யில் உள்ள கடையொன்றில் பதுக்கி வைத்திருந்த 40 லீற்றர் டீசல் ஆகியனவே இவ்வாறு பொலிஸாரால் மீட்கப்பட்டிருப்பதுடன்சந் தேக நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ள னர். (4-6-30)

## சுழிபுரம் ஞானவைரவர் மணவாளக் கோலம்

(சாவகச்சேரி)

சுழிபுரம்-பெரியபுலோ அரசடி சாமுண்டாதேவி சமேத ஞானவைரவர் ஆலய அலங்காரத் திரு விழா கடந்த செவ்வாய் கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் இடம்பெறவுள்ளது.

நாளை ஞாயிற்றுக் கிழமை 6ஆம் திருவிழா தினத்தன்று மணவாளக் கோளம் மற்றும் சங்கா பிஷேகம் ஆகியன இடம் பெறவுள்ளன. (4-6-30)

## யாழ்.பல்கலை மாணவர்களுக்கான தொல்லியல்சார் தொடர்பான பயிற்சி



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலை மாணவர்களுக்கான தொல் லியல்சார் தொழில் நுட்ப ங்கள் தொடர்பான பயிற்சி வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்ப்பாண கோட்டையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் தொல்லியல் சார் தொழில்நுட்பங்கள் தொடர்பாக மாணவர்களு க்கு விளக்கமளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் யாழ்ப் பாணத்துக்கான இந்திய துணைத்தூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன், வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் இளங்கோவன், தொல் லியல் திணைக்களத்தினர், தொல்லியல் துறை விரிவு ரையாளர்கள் மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (4-6-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவின் தடைகளால் இலங்கைக்கு பாதிப்பில்லை

## அமெ.தூதுவர் ஜூலிசங்

(கொழும்பு)

**ரஷ்யாவின் கச்சா எண்ணெய் மீது அமெரிக்கா விதித்துள்ள தடைகளால் இலங்கைக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது என இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.**

இலங்கை எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடிக்கு அமெரிக்கா வழங்கி வரும் ஆதரவு குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

உலக நாடுகளுடன் இலங்கை எவ்வாறு இராஜதந்திர உறவுகளைப் பேண வேண்டும் என்பது தொடர்பில் அமெரிக்கா ஆலோசனை வழங்குவதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், அது இலங்கை அரசாங்கத்தின் தீர்மானம் எனவும் அமெரிக்கத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

ரஷ்ய கச்சா எண்ணெய்க்கு அமெரிக்காவில் மாத்திரமே பொருளாதார தடைகளை விதித்துள்ளதாகவும், ரஷ்யாவிடம் கச்சா எண்ணெயை வாங்குவது என்பது அந்த நாடுகளின்



வேலை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (4)

# துப்பாக்கியால் சுட்டு விட்டு தப்பியோடிய எம்.பி

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் லலித் வர்ணகுமார, ஹொரணை அங்குருவா தொட்ட தொம்பகொட இராணுவ முகாம் சந்தியில் உள்ள வீடொன்றின் மீது துப்பாக்கி பிரயோகம் செய்துவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக அங்குருவாதொட்ட பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நிகழ்வு ஒன்றிற்கு சென்றிருந்த வேளை பாராளுமன்ற உறுப்பினருக்கும் சிவருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து வாக்குவாதத்தில் ஈடுபட்டவர்களை சமாதானம் செய்து கொண்டு பாராளுமன்ற உறுப்பினர் திரும்பிச் சென்றுள்ளார்.

இந்த நிலையில் நேற்று அதிகாலை அங்கு சென்ற பாராளுமன்ற உறுப்பினர் தனது வாகனத்தில் இருந்தவாறு நிகழ்வு நடந்த வீட்டை நோக்கியும் வாகனத்தை நோக்கியும் மூன்று முறை துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளதாக முறைப்பாடு கிடைத்துள்ளது என அங்குருவா தொட்டபொலிஸார் தெரிவித்துள்ளனர் .(4)

# பாதுகாப்பை பலப்படுத்துவதில் அரசாங்கம் தீவிரம்

(கொழும்பு)

கொழும்பு நகரில் நேற்று வெள்ளிக்கிழமை முதல் விசேட பாதுகாப்பு வேலைத்திட்டமொன்றை நடை முறைப்படுத்த பொலிஸ் தலைமையகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அரசாங்கத்திற்கு எதிராக நடைபெறவுள்ள பாரியளவிலான ஆர்ப்பாட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ள பின்னணியிலேயே இவ்வாறு பாதுகாப்பு பலப்படுத்தப்படவுள்ளது.

இதற்கமைய மேல் மாகாணத்திற்கு வெளியில். இருந்து சுமார் மூவாயிரம் பொலிஸ் உத்தியோகத்தர்கள் அடங்கிய குழுவொன்றை விசேட கடமை அடிப்படையில் கொழும்புக்கு வரவழைப்பதற்கு பொலிஸ் தலைமையகம் ஏற்கனவே ஏற்பாடுகளை செய்துள்ளது. (4)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 1<br>கி.பா: சூரி 10 செவ் 7 இல்<br>உயரம்:5'5"<br>தகைமை/தொழில்:QS, TO<br>எதிர்பார்ப்பு:படித்த உத்தியோகமுள்ள பெண்<br>தொ.இ: B/10173 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 3<br>கி.பா: 10 சூரி 3 செவ் 11 இல்<br>உயரம்:5'3"<br>தகைமை/தொழில்:MBA கணக்காளர்<br>எதிர்பார்ப்பு:அவுஸ்திரேலியா நியூஸ்லாந்து மட்டும்<br>தொ.இ:G/10632 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 4<br>கி.பா:42 சூரி 12 செவ் 8 இல்<br>உயரம்: 172 cm<br>தகைமை/தொழில்: O/L பிரான்ஸ்<br>எதிர்பார்ப்பு:சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/10188 | பிறப்பு:1994 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 3<br>கி.பா:30 ½ சூரி.செவ் 2 இல்<br>உயரம்:5'4"<br>தகைமை/ தொழில்:A/L தந்தையுடன் கடை நடத்துகிறார்.<br>எதிர்பார்ப்பு: தனியார் நிரந்தர.அரச தொழில்<br>தொ.இ: G/10643 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்ச்த்திரம்: மிருகசீரிடம் 2<br>கி.பா: 11 சூரி 11 செவ் 04 இல்<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்: A/L கடை<br>எதிர்பார்ப்பு: தொழிலுள்ள பெண் உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/10193 | பிறப்பு: 1971 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 1<br>கி.பா:6 சூரி 12 செவ் 5 இல்<br>உயரம்:5'<br>தகைமை/தொழில்:வெளிவாரி பட்டதாரி<br>எதிர்பார்ப்பு:விவாகரத்து பெற்றவர் விவாகரத்துப் பெற்ற.பிள்ளைகள் இல்லாத மணமகன்<br>தொ.இ:G/10651 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம் : சித்திரை 3<br>கி.பா:12 ¼ சூரி 3 செவ் 4 இல்<br>உயரம் :170 cm<br>தகைமை/தொழில்: BFA புட்டதாரி ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு :அரச தொழில் உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/10195 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 1<br>கி.பா:31 ¾ சூரி 1 செவ் 10 இல்<br>தகைமை/தொழில்:BA பட்டதாரி<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு அல்லது உத்தியோகம்<br>தொ.இ:G/10658 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் [illegible]
சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


# எரிபொருள் இறக்குமதிக்கு தேவையான 217 பில். ரூபாயை வழங்குங்கள்

## திறைசேரியிடம் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம், எரிபொருள் இறக்குமதிக்கு தேவையான டொலர்களை செலுத்துவதற்காக திறைசேரியிடம் 217 பில்லியன் ரூபாவை கோரியுள்ளது.

இந்த கோரிக்கை மத்திய வங்கிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், வழங்குவதா இல்லையா என்பது நாணயச் சபையினால் தீர்மானிக்கப்படும் எனவும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார். பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு திறைசேரியிலிருந்து தேவையான பணத்தை வழங்கத் தவறினால், அதனை இலங்கை மத்திய வங்கி வழங்குவதற்கு நிதிச் சபையின் அனுமதி தேவை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாணயச் சபையின் அனுமதியுடன் கடந்த வாரம் பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு மத்திய வங்கி 18.5 பில்லியன் ரூபாவை வழங்கியதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (4)

# மருத்துவமனைக்கு செல்ல எரிபொருள் இல்லை




(கொழும்பு)

சுகயீனமடைந்த தங்களது குழந்தையினை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல எரிபொருள் இல்லாத நிலையில், குழந்தையின் பெற்றோர் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் காத்திருந்த புகைப்படம் வைரலாகி வருகின்றது.

பண்டாரகம - பாணந்துறை வீதியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று முன்தினம் வியாழக் கிழமை இந்த சம்பவம் பதிவாகியுள்ளது.

இதுகுறித்து அங்கு பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த பாதுகாப்பு தரப்பினரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

எனினும் குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் கையிருப்பு இல்லாத நிலையில், எரிபொருள் வரும் வரை குழந்தையின் பெற்றோர் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் காத்திருந்தனர். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 91

# செய்தார்க்கு செய்தவினை



ஒரு நாட்டின் மன்னன் யானை மீதமர்ந்து நகர் வலம் சென்று கொண்டிருந்த வேளை வழியில் ஒரு குறிப்பிட்ட கடை வந்த பொழுது, மன்னன் அருகிலிருந்த மந்திரியிடம் ஏனென்று எனக்குப் புரியவில்லை ஆனால் இந்தக் கடைக்காரனைத் தூக்கிலிட்டுக் கொன்று விடவேண்டும் என்று தோன்றுகிறது எனக் கூறினார்.

மன்னனின் பேச்சைக் கேட்ட மந்திரி அதிர்ந்து போய் மன்னனிடம் விளக்கம் கேட்பதற்குள் மன்னன் அக்கடையைத் தாண்டி நகர்ந்து விட்டார்.

அடுத்த நாள் அந்த மந்திரி மட்டும் தனியாக அந்தக் கடைக்கு வந்து அந்தக் கடைக்காரனிடம் யதார்த்தமாகக் கதைப்பது போல வியாபாரம் நன்றாக நடக்கிறதா என்று விசாரித்தார்.

"என் கடைக்கு வாடிக்கையாளரே யாரும் இல்லை. கடைக்கு நிறைய மக்கள் வருகின்றனர். சந்தனக் கட்டைகளை முகர்ந்து பார்க்கின்றனர். நல்ல மணம் வீசுவதாகப் பாராட்டக் கூட செய்கின்றனர், ஆனால் யாரும் வாங்குவதுதான் கிடையாது" என்று வருத்தத்துடன் பதில சொன்னான் கடைக்காரன்.

"இந்த நாட்டின் அரசன் சாகும் நாளை எதிர்நோக்கியுள்ளேன். அவன் இறந்து போனால் எப்படியும் எரிக்க நிறைய சந்தனக் கட்டைகள் தேவைப்படும் எனக்கு நல்ல வியாபாரம் ஆகி என் வறுமை தீரும்" என்று கடைக்காரன் சொன்னதைக் கேட்ட மந்திரி அதிர்ந்து போனார்.

அப்போதுதான் மந்திரிக்கு முதல் நாள் அரசன் சொன்னதன் காரணம் என்னவென்று விளங்கியது.

இந்தக் கடைக்காரனின் கெட்ட எண்ணமே மன்னனின் மனதில் எதிர்மறை அதிர்வுகளை அவனறியாமல் உண்டாக்கி அப்படிச் சொல்ல வைத்தது என்று உணர்ந்தார் மந்திரி.

மிகவும் நல்லவரான அந்த மந்திரி இந்த விடயத்தை சுமுகமாகத் தீர்க்க உறுதி பூண்டார். தான் யாரென்பதைக் காட்டிக் கொள்ளாமல் அவர் கடைக்காரனிடம் கொஞ்சம் சந்தனக் கட்டைகளை விலைக்கு வாங்கினார்.


அதன் பின் மந்திரி அந்தச் சந்தனக் கட்டைகளை எடுத்துச் சென்று அரசனிடம் இதைப் பரிசாக சந்தன மரக்கடைக்காரன் உங்களிடம் கொடுக்கும் படி தந்தான் என்றார். தங்க நிறமுள்ள சந்தனக் கட்டைகளை எடுத்து முகர்ந்த அரசன் மகிழ்ந்தார்.அதன் பின் தான் அந்தக் கடைக்காரனை கொல்லும் எண்ணம் தனக்கு ஏன் வந்ததோ என்று வெட்கப்பட்டார்.

அரசன் அந்தக் கடைக்காரனுக்கு சில பொற்காசுகளைக் கொடுத்தனுப்பினார். அரசன் கொடுத்தனுப்பியதாக வந்த பொற்காசுகளைப் பெற்றுக் கொண்ட வியாபாரி அதிர்ந்து போனான். அந்தப் பொற்காசுகளால் அவனது வறுமை தீர்ந்தது. இதை உணர்ந்த அந்தக் கடைக்காரன் இவ்வளவு நல்ல குணம் கொண்ட அரசனை தன்னுடைய சுயநலத்துக்காக இறக்க வேண்டும் என்று தான் எண்ணியதற்கு மனதுக்குள் மிகவும் வெட்கப்பட்டு வருந்தினான்.

வினை என்பது நமது எண்ணங்களே " நாம் அடுத்தவர்கள் மேல் நல்ல அன்பான எண்ணங்களை வைத்திருந்தால் அந்த நேர்மறை எண்ணங்கள் நமக்கு வேறேதேனும் வழியில் சாதகமாகத் திரும்பி வரும்.

மாறாக நாம் அடுத்தவர் மேல் கெடுதலான எண்ணங்களை உள்ளே விதைத்தால், அதே எண்ணம் நம் மேல் கெடுதலான வழியில் திரும்பவும் வந்து சேரும்...

இதுவே "செய்தார்க்கு செய்த வினை"



TU Jiinthu

அன்பு வாசகர்களே!
முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Scithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.

# கடைசி உக்ரைனி...
# போர் தொடரும்-

(மொஸ்கோ)

**கடைசி உக்ரைனியர் நிற்கும் வரை போர் தொட... ஜனாதிபதி விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.**

ஸ்டேட்டுமா கட்சி பிரிவுகளின் தலைவர்களுடனான சந்திப்பின் போது அவர் இந்த கருத்தை தெரிவித்ததாக, மாநில ஊடக தொலைக்காட்சி ரஷ்யா-24 செய்தி வெளியிட்டுள்ளது.

இதன்போது அவர் மேலும் கூறுகையில், 'இன்று அவர்கள் எங்களை போர்க்களத்தில் தோற்கடிக்க விரும்புகிறார்கள் என்று கேள்விப்படுகிறோம். சரி, நான் என்ன சொல்ல முடியும்? அவர்கள் முயற்சி செய்யட்டும்.

கடைசி உக்ரைனியனும் நிற்கும் வரை மேற்குலகம் எங்களுடன் சண்டையிடத் தயாராக இருப்பதாக நாங்கள் தொடர்ந்து கேள்விப்பட்டு வருகிறோம். இது உக்ரைனிய மக்களுக்கு ஒரு சோகம். இருப்பினும்,

# பிரித்தானியாவுடன் தொடர்ந்து செயற்பட தயார்
## ஜோ பைடன்

(லண்டன்)



பிரித்தானிய அரசாங்கத்துடன் தொடர்ந்து நெருக்கமான ஒத்துழைப்பை வழங்க ஆவலுடன் இருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

பெரும்பான்மை ஆதரவை இழந்ததால் பிரதமராக இருந்த பொரிஸ் ஜோன்சன், தனது பதவியை இராஜினாமா செய்துள்ள நிலையில், ஜோ பைடன் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில், 'பிரித்தானியாவும் அமெரிக்காவும் நெருங்கிய நண்பர்கள் மற்றும் நட்பு நாடுகள். எங்களுக்கு இடையிலான சிறப்பான உறவு வலுவாக நீடித்தது.

உக்ரைன் மக்களுக்கான ஆதரவு, உள்ளிட்ட பல்வேறு விடயங்களில் அமெரிக்காவும் பிரித்தானியாவும் தொடர்ந்து இணைந்து செயற்படும்' என கூறினார். (4)

# ஷின்சோ அபேயின் மறைவுக்கு உலக தலைவர்கள் இரங்கல்

ஜப்பானின் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபேயின் மறைவுக்கு உலக தலைவர்கள் இரங்கல் வெளியிட்டுள்ளனர். தென் கொரிய ஜனாதிபதி யூன் சுக்-யோல் ஜப்பானுக்கு தனது இரங்கலைத் தெரிவித்தார்.

அபேயை சுட்டுக் கொன்றது 'மன்னிக்க முடியாத குற்றம்' என்று விபரித்தார். ஜேர்மன் ஜனாதிபதி ஓலாஃப் ஸ்கோல்ஸ், தான் மிகவும் சோகமாகவும் திகைப்புடனும் இருப்பதாகக் கூறினார். 'இந்த கடினமான நேரங்களில் ஜேர்மனி ஜப்பானின் பக்கம் நெருக்கமாக நிற்கும் என்றும் கூறினார். ரோமானிய ஜனாதிபதி கிளாஸ் அயோஹானிஸ், அபேவை ஜனநாயகம் மற்றும் பலதரப்புவாதத்தின் வலுவான பாதுகாவலர் மற்றும் உண்மையான நண்பர் என்று விபரித்தார். துருக்கி ஜனாதிபதி ரெசெப் தையிப் எர்டோகன், அபேவை அன்புள்ள நண்பர் என்று அழைத்தார். மேலும் இந்த கொடூரமான தாக்கு தலை நடத்தியவர்களை நான் கண்டிக்கிறேன் என கூறினார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ...னியர் நிற்கும் வரை
## ...ம்-புடின் அறிவிப்பு

...தாடரலாம் என ரஷ்ய



...று எல்லாம் இதை நோக்கிச் செல்வது போல் தெரிகிறது.

நாங்கள் சமாதானப் பேச்சுவார்த்தைகளை மறுக்கவில்லை. ஆனால், எங்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவது மிகவும் கடினமாக இருக்கும் என்பதை அவர்கள் அறிந்து கொள்ள வேண்டும்' என கூறினார். (4)

## பதவி விலகினார் பொறிஸ்ஜோன்சன்



(லண்டன்)

கென்சவேர்ட்டிவ் கட்சியின் தலைமை பதவியிலிருந்தும் பிரதமர் பதவியிலிருந்தும் விலகுவதாக பொறிஸ் ஜோன்சன் அறிவித்துள்ளார்.


கட்சி தலைவர் பதவியிலிருந்து விலகுகின்றேன். ஆனால் புதிய பிரதமரை கட்சி தெரிவு செய்யும் வரை பதவியில் நீடிப்பேன் என பொறிஸ் ஜோன்சன் தெரிவித்துள்ளார்.

யாரும் தவிர்க்க முடியாதவர்கள் அல்ல என அவர் குறிப்பிட்டுள்ளார். உலகின் தலை சிறந்த பணியை விட்டுக்கொடுப்பது குறித்து கவலையடைகின்றேன் என தெரிவித்துள்ள அவர் கென்சவேர்ட்டிவ் பாராளுமன்ற குழுவே தான் பதவி விலகுவதற்கான காரணம் எனக் குற்றம் சாட்டியுள்ளார். (4)

## 76 மில். ஆண்டு பழமையான டைனோசர் எலும்புக்கூடு ஏலம்

(வோஷிங்டன்)

சுமார் 76 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் பூமியில் சுற்றித் திரிந்ததாக நம்பப்படும் டைனோசரின் எலும்புக்கூடு இம்மாதம் நியூயோர்க்கில் ஏலத்திற்கு விடப்படும் என்று சௌதபிஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.



எலும்புக்கூட்டுப்படிமம் டைனோசொரஸ் வகையுடன் தொடர்புர்டைய கோர் கோசாரசுக்கு சொந்தமானது. அமெரிக்காவின் மொண்டானா மாநிலத்தில் 2018 இல் கண்டறியப்பட்ட எலும்புக்கூடு கிட்டத்தட்ட 3 மீற்றர் உயரமும் 6.7 மீற்றர் நீளமும் கொண்டுள்ளது.

இதுவரை கண்டறியப்பட்ட கோர்கோசாரஸ் எலும்புக்கூடுகள் அனைத்தும் அருங்காட்சியகங்களில் உள்ளதாகவும், குறிப்பிட்ட எலும்புக்கூடு மட்டுமே தனியார் உரிமைக்குக் கிடைக்கக்கூடியது என்றும் ஏல நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

எலும்புக்கூடு 5 மில்லியன் டொலரிலிருந்து 8 மில்லியன் அமெரிக்க டொலர் வரை விலை போகலாம் என்று சௌதபிஸ் மதிப்பிட்டுள்ளது. (4)

## சீனர்களின் ஆயுட்காலம் 0.6 ஆண்டாக அதிகரிப்பு

(பீஜிங்)

உலகிலேயே அதிக மக்கள் தொகையை கொண்ட நாடான சீனாவில் இப்போது குழந்தைகள் பிறப்பு விகிதம் வெகுவாக குறைந்துள்ளது.

கடந்த 2016 ஆம் ஆண்டு, தம்பதியர் 2 குழந்தைகள் பெற்றுக்கொள்ள அனுமதி அளித்தும் நிலைமையில் பெரிதான மாற்றம் இல்லை. கடந்த ஆண்டு, தம்பதியர் 3 குழந்தைகள் பெற்றுக் கொள்ளவும் அனுமதி தந்து சட்ட திருத்தம் செய்யப்பட்டது. இந்த நிலையில் அங்கு வாழ்கிற மக்களின் ஆயுட்காலம் 0.6 ஆண்டு அதிகரித்து 77.93 ஆண்டுகளாகி இருக்கிறது.

கடந்த 2020 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்புபடி சீனாவில் 60 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினரின் எண்ணிக்கை 26 கோடியே 40 இலட்சமாக உள்ளது. சீனாவின் அங்கமாக உள்ள திபெத்தில் உயரமான நிலப்பரப்பு காரணமாக ஒக்சிஜன் அளவு குறைவாக உள்ள தால், அங்கு மக்களின் ஆயுட்காலம் 1951 இல் 35.5 ஆண்டுகள்ாக இருந்தது. தற்போது அது 72.19 ஆண்டுகளாக உள்ளது. (4)

## ஜப்பான் முன்னாள் பிரதமர் துப்பாக்கிச்சூட்டில் பலி

(டோக்கியோ)

ஜப்பானின் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபே துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளதாக ஜப்பானின் தேசிய ஒளிபரப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

தாக்குதல் நடந்த நாராவில் உள்ள மருத்துவமனையில், சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகிச்சை பலன் இன்றி ஷின்சோ அபே உயிரிழந்ததாக என்று லிபரல் டெமாக்ரடிக் கட்சியின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

67 வயதான, ஜப்பானின் நீண்ட காலம் பிரதமராக இருந்த அபே, [illegible] உரையின் போது [illegible] சுட்டுக் கொல்லப்பட்டார்.

முன்னாள்பிரதமர் ஷின்சோ அபேவை சுட்டுக் கொன்றது தொடர்பாக, 40 வயதான நாராவைச் சேர்ந்த யமகாமி டெட்சுயாவை பொலிஸார் கைது செய்துள்ளதாக, பொது ஒளிபரப்பு நிறுவனமான என்ஹெச்கே, பொலிஸ்துறை வட்டாரங்களை மேற்கோள் காட்டி செய்தி வெளியிட்டுள்ளது. அவர் சம்பவ இடத்தில் வைத்தே கைது செய்யப்பட்டார். (4)

## ஆப்கானில் கனமழை வெள்ளத்தில் சிக்கி 10 பேர் பலி

(காபூல்)

ஆப்கானிஸ்தானின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பருவமழை மற்றும் வெள்ளம் காரணமாக இரண்டு குழந்தைகள் உட்பட 10 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த வெள்ளத்தில் 11 பேர் படுகாயமடைந்துள்ளனர். குறிப்பாக, கிழக்கு நங்கர்ஹார், நூரிஸ்தான் மற்றும் கானி மாகாணங்கள் மற்றும் நாட்டின் வடக்கே பர்வானில் அதிக உயிரிழப்புகள் மற்றும் சேதங்கள் பதிவாகியுள்ளதாக ஐ.நா அலுவலகம் தெரிவித்துள்ளது.

மேலும், கடந்த 5 மற்றும் 6ஆம் திகதிகளில் பெய்த கனமழையால் 280 இற்கும் மேற்பட்ட வீடுகள் கடுமையாக சேதமடைந்தன. அத்துடன் நான்கு பாலங்கள் மற்றும் எட்டு கிலோமீற்றர் தொலைவு சாலை உட்பட ஒன்பது மாகாணங்களில் உள்ள மற்ற முக்கியமான உட்கட்டமைப்புகள் சேதமடைந்துள்ளன. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைவிடப்பட்ட காணிகளில் விவசாயம் மேற்கொள்ள முன்வரும் விவசாயிகளுக்கு உதவ நடவடிக்கை

## கிளிநொச்சி அரச அதிபர்

(முறிகண்டி)

கைவிடப்பட்ட காணிகளில் விவசாயம் மேற்கொள்ள முன்வரும் விவசாயிகளிற்கு உதவ நடவடிக்கை என கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் அறிவித்துள்ளார். இது தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களிற்கு கருத்து தெரிவித்த மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் குறிப்பிடுகையில், மாவட்டத்தில் உணவுத் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் கைவிடப்பட்ட அல்லது பராமரிப்பற்ற காணிகளில் விவசாயம் செய்ய முன்வரும் விவசாயிகளை நாம் வரவேற்கின்றோம்.

அவர்களிற்கு தேவையான விதை தானியம் உள்ளிட்ட வற்றை வழங்க சர்வதேச மற்றும் உள்ளூர் நிறுவனங்கள் தயாராக உள்ளன.

எமது மாவட்டத்திற்கான உணவு தேவையை பூர்த்தி செய்வதற்கு உள்ளூர் உணவு உற்பத்தியை அதிகரிக்க வேண்டும்.

அதற்காக விவசாயிகள் முன்வர வேண்டும் எனவும் உதவ தயாராக இருப்பதாகவும் மாவட்ட அரசாங்க அதிபர் அழைப்பு விடுத்துள்ளார். (4-6-100-316)

# பொருளாதார நெருக்கடியை கண்டித்து முல்லையில் ஆர்ப்பாட்ட பேரணி



(அக்கராயன்)

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி உட்பட உணவுப் பற்றாக்குறை, மருந்து நெருக்கடிஎனப்பல்வேறு விடயங்களை வெளிப்படுத்தும் வகையில் ஆர்ப்பாட்ட பேரணி ஒன்று முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் நேற்று நடைபெற்றது. புதுக்குடியிருப்பு அம்மன் கோவிலில் இருந்து இப்பேரணி முதன்மை வீதி வழியாக நகர்ந்து புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தினை சென்றடைந்தது.

இப்பேரணியில் எரிபொருள் கிடைக்க வேண்டும், உணவு, மருந்துகள் கிடைக்க வேண்டும் என மக்களினால் கோஷங்கள் எழுப்பப்பட்டன.(4-6-350)

# எரிபொருள் பெற்றுத்தரக் கோரி சுகாதார சிற்றூழியர்கள் கவனயீர்ப்பு



(முறிகண்டி)

கரைச்சி பிரதேச சபையின் சுகாதார சிற்றூழியர்கள் நேற்று போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

குறித்த போராட்டம் நேற்றுக்காலை 10.30 மணியளவில் பிரதேச சபை முன்பாக A9 வீதியில் இடம்பெற்றது.

தமது சேவை அத்தியாவசிய சேவையாக அறிவிக்கப்பட்ட நிலையில், தாம் கடமைக்கு செல்வதற்கு பெற்றோல் பெற்றுத்தருமாறு கூறியே குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்ட குழுவினர் மாவட்ட அரசாங்க அதிபரை சந்தித்து மகஜர் ஒன்றை கையளிக்க சென்றனர்.

இந்த நிலையில் குறித்த போராட்டக்காரருடன் மேலதிக அரசாங்க அதிபர் எஸ் சிறிமோகன் கலந்துரையாடினார். (4-6-100)

# பதுக்கி வைத்திருந்த எரிபொருளினை அத்தியாவசிய சேவைகளுக்காக கிளி. அரச அதிபரிடம் கையளிப்பு

(முறிகண்டி)

தனிநபர்உடைமையிலிருந்த 6800 லீற்றர் டீசல் அத்தியாவசிய சேவைகளிற்காக மாவட்ட அரசாங்க அதிபரிடம் கிளிநொச்சி நீதிமன்றினால் நேற்று உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது. கிளிநொச்சி கரடிபோக்கு பகுதியில் கடந்த வாரம் சட்டத்திற்கு முரணாக கையிருப்பில் வைத்திருந்த டீசல், பெற்றோல் மற்றும் மண்ணெண்ணையே இவ்வாறு நீதிமன்றினால் விடுவிக்கப்பட்டு அத்தியாவசிய சேவைகளிற்காக பயன்படுத்த கையளிக்கப்பட்டது.

அதற்கு அமைவாக நேற்று வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், மேலதிக அரசாங்க அதிபர் சிறிமோகன் உள்ளிட்ட குழுவினர் நீதிமன்ற பதிவாளரை சந்தித்து குறித்த எரிபொருட்களை பெற்றுக்கொண்டனர்.

குறித்த எரிபொருளை கூட்டுறவு சங்கத்திற்கு சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு கையளித்து அவற்றை அத்தியாவசிய சேவைகளிற்காக பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என அரச அதிபர் தெரிவித்தார். (4-6-100-316)

# ஏழு மோட்டார் செல்கள் பரந்தனில் மீட்பு



(தருமபுரம்)

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரிய பரந்தன் பகுதியில் உள்ள தனியார் காணி ஒன்றில் 7 செல்கள் மீட்கப்பட்டுள்ளன.

காணி உரிமையாளர் தனது காணியில் தென்னை மரத்திற்கு குழி வெட்டிய போது உரப்பையில் கட்டியபடி கைவிடப்பட்ட நிலையில் 7 மோட்டார் செல்கள் இனங்காணப்பட்டதையடுத்து கிளிநொச்சி பொலிஸாருக்கு தகவல் வழங்கினார்.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் வெடி பொருட்களை பார்வையிட்டதுடன் நீதிமன்ற அனுமதியுடன் அதனை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளவிருப்பதாக தெரிவித்தனர். (4-6-316)

# பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு கோரி வவுனியாவில் இன்று கவனயீர்ப்பு

(வவுனியா)

மக்கள் வாழ வழி செய்ய முடியாத கோத்தா - ரணில் அரசாங்கம் வீட்டுக்குப் போக வேண்டும் என வலியுறுத்துகிறார்கள். ஆகவே மக்களின் மனநிலையைப் புரிந்து கொண்டு அரசாங்கம் பதவி விலக வேண்டும் என வவுனியா மாவட்ட சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு சார்பாக அதன் செயலாளர் சு. டோன் பொஸ்கோ தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் குறிப்பிடுவதாவது தடையற்ற இறக்குமதியும், தேசிய பொருளாதாரம் சீர்குலைக்கப்பட்டமையும், தேசிய இனப் பிரச்சினை தீர்க்கப்படாமல் யுத்தமாக்கப்பட்டமையும், ஊழல் நிறைந்த நிர்வாகமும் நாட்டின் பொருளாதாரத்தை அகல பாதாளத்திற்கு தள்ளியுள்ளது. அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலையுயர்வு, தட்டுப்பாடு காரணமாக மக்கள் நீண்ட வரிசையில் நிற்கிறார்கள். அன்றாட வேலையில் ஈடுபடுவோர் தொழில் வாய்ப்பின்றி வாழ முடியாது தவிக்கின்றார்கள்.

பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய், சமையல் எரிவாயு முதலியவற்றின் தட்டுப்பாடு, பதுக்கல் காரணமாக போக்குவரத்து, மீன்பிடி கைத்தொழில், அன்றாட கருமங்கள் மாத்திரமின்றி சமையல் கூட செய்ய முடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

மருந்துப் பொருட்களின்மையால் இலவச மருத்துவம், கல்வி என்பனவும் மக்களுக்கு கிடைக்காமல் போயுள்ளது.

பொதுமக்களின் இயல்பு வாழ்க்கையை ஒழுங்கமைக்க முடியாத அரசாங்கம் பதவி விலக வேண்டும் எனும் நாடு தழுவிய மக்களின் கோரிக்கையோடு சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பும் கைகோர்த்து நிற்கின்றது.

மேலும் இப் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு கோரி கவனயீர்ப்பு போராட்டம் இன்று சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு பழைய பேருந்து நிலையத்தில் நடைபெற உள்ளது. இப்போராட்டத்தை வலுவூட்ட இனமத பேதங்களை கடந்து அனைவரையும் கலந்து கொள்ளுமாறும் கேட்டுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-6)

## கிளிநொச்சி மாவட்ட

# தனியார் பேருந்து சேவையினருக்கு 1300 லீற்றர் டீசல் வழங்க முடிவு

(முறிகண்டி)

கிளிநொச்சி தனியார் பேருந்து சேவைக்கு 1300 லீற்றர் டீசல் வழங்குவதென முடிவு எட்டப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே மேற்கண்டவாறு முடிவு எட்டப்பட்டது.

இதன் போது, கிளிநொச்சி பேருந்து சாலைக்கு எடுத்து வரப்படும் டீசல் எரிபொருளில் அத்தியாவசிய சேவைக்காக 2000 லீற்றரும், தனியார் பேருந்து சேவைக்காக 1300 லீற்றரும், மிகுதி அரச பேருந்து சேவைக்காகவும் பயன்படுத்தும் வகையில் தீர்மானம் எட்டப்பட்டது.

அதற்கமைவாக, அரச பேருந்து சேவை மற்றும் தனியார் பேருந்து சேவையினருக்குமிடையிலான முறுகல் நிலை முடிவுக்கு வந்துள்ளது.

குறித்த எரிபொருள் விநியோகத்தின்போது மாவட்ட செயலக அலுவலர் ஒருவர் கண்காணிப்பில் ஈடுபடுவார் எனவும் இதன்போது தீர்மானிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (4-6-100)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எரிபொருள், எரிவாயு பிரச்சினைக்கு தீர்வாக கரி உற்பத்தி முன்னெடுப்பு

**(கொழும்பு)**
**எரிபொருள் மற்றும் எரிவாயு பிரச்சினைக்கு தீர்வாக, அரச மரக் கூட்டுத்தாபனம் கரி உற்பத்தியை ஆரம்பித்துள்ளது.**

அப்புறப்படுத்தப்பட்ட மரத் துண்டுகளை பயனுள்ள வகையில் பயன்படுத்தி கரியை உற்பத்தி செய்யுமாறு இதற்கு முன்னர் விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர, அரச மரக் கூட்டுத்தாபனத்திற்கு பணிப்புரை விடுத்திருந்தார்.

ஒரு கிலோ 130 ரூபாய் என்ற விலையில் கரியை வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும், அதற்கு அதிக கிராக்கி ஏற்பட்டுள்ளதாகவும் விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. (4)



# கர்ப்பிணித் தாய்மார்கள் முகக்கவசம் அணியுங்கள்

(கொழும்பு)

தற்போது வேகமாகப் பரவி வரும் இன்புளுவன்சா வைரஸ், கர்ப்பிணித் தாய்மார்களுக்கும், குழந்தை பிரசவித்த தாய்மார்களுக்கும், குழந்தைகளுக்கும் கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தும் என்பதனால் மிகவும் அவதானமாக இருக்குமாறு மகப்பேற்று மற்றும் மகளிர் மருத்துவ நிபுணர் சனத் லெனாரோல் வலியுறுத்தியுள்ளார்.

கர்ப்பிணித் தாய்மார்கள் முடிந்தவரை முகக் கவசம் அணியுமாறும், வைரஸ் பரவுவதைத் தவிர்ப்பதற்காக மேலும் மக்கள் நெரிசல் மிகுந்த இடங்களுக்கு செல்வதை தவிர்க்க வேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார்.

இந்த நாட்களில் காய்ச்சல் ஏற்படுமிடத்து உடனடியாக மகப்பேற்று மற்றும் மகளிர் மருத்துவ நிபுணரை சந்தித்து மருத்துவமனையில் அனுமதிக்கவும். தாயும் குழந்தையும் கூடிய விரைவில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டால், அவர்களுக்கு ஏற்படும் பாதிப்புகளில் இருந்து பாதுகாக்க தேவையான சிகிச்சை அளிக்க முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (4)

# இந்தியாவில் வீதிக்கண்காட்சிகள் நடத்தவுள்ள இலங்கை அரசு

(கொழும்பு)

இந்தியாவில் வீதிக் கண்காட்சிகளை நடத்த இலங்கை அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தத் தகவலை சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கையை கட்டி எழுப்பவும், வெளிநாட்டு அந்நிய செலவணிகளை பெற்றுக் கொள்ளும் நோக்கிலுமே இந்தியாவிலுள்ள முக்கிய ஐந்து நகரங்களில் வீதி கண்காட்சிகளை நடத்த உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நெருக்கடியில் இருந்து வெளிவர வேண்டுமானால் இலங்கைக்கு சுற்றுலாத்துறை மூலமாக வருமானம் அதிகரிக்க வேண்டும் எனவும் அது மிகவும் இன்றியமையாத ஒரு வருமானமாக காணப்படும் எனவும் சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார். (4)

# இலங்கையில் மீண்டும் அதிகரிக்கும் கொரோனா

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கையில் தற்போது மீண்டும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.



அந்தத் திணைக்களத்தின் தகவலின்படி, புதிதாக 20 பேர் கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து, இலங்கையில் இதுவரை பதிவாகியுள்ள கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை 6 இலட்சத்து 64 ஆயிரத்து 217 ஆக அதிகரித்துள்ளது.

நாட்டில் அண்மைக்காலங்களில் ஒற்றை இலக்கங்களிலேயே கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை பதிவாகி வந்தன.

இந்த நிலையில், தற்போது அதில் சிறிது அதிகரிப்பு ஏற்பட்டுள்ளமையால், மக்கள் அனைவரையும் 3 ஆம் மற்றும் 4 ஆம் தடுப்பூசிகளை செலுத்திக் கொள்ளுமாறு சுகாதார அமைச்சு கேட்டுக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

# பாதுகாப்பு அமைச்சிடம் இருந்த 3 நிறுவனங்கள் தம்மிக்கவிடம்



(கொழும்பு)

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் இருந்த சில நிறுவனங்கள் முதலீட்டு அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

இது தொடர்பான, அதி விசேட வர்த்தமானியை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வெளியிட்டுள்ளார்.

இதன்படி ரக்னா லங்கா நிறுவனம் செலந்திவ முதலீட்டு நிறுவனம் மற்றும் ஹோட்டல் டெவலப்பர்ஸ் லங்கா (தனியார்) நிறுவனம் என்பன அமைச்சர் தம்மிக்க பெரேரா தலைமையிலான முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. (4)

# பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவரை விசாரிக்குக

## எரிசக்தி அமைச்சர்



(கொழும்பு)

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் முன்வைத்த குற்றச்சாட்டு தொடர்பில் விசாரணைகளை நடத்துமாறு அமைச்சர் காஞ்சன விஜேசேகர கோரிக்கை விடுத்துள்ளார்.

தனது டுவிட்டர் பக்கம் ஊடாகவே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் பொது மக்களை தவறாக வழி நடத்தியுள்ளாரா என கோப் குழு விசாரிக்க வேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார்.

அத்துடன், தன்னையும் விசாரணைக்கு உட்படுத்துமாறும் அவர் இதன்போது கோரிக்கை விடுத்துள்ளார். (4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 280 | 200 | 320 |
| உருளைக்கிழங்கு | 280 | 200 | 200 | 220 |
| பச்சைமிளகாய் | 420 | 400 | 450 | 600 |
| தக்காளி | 250 | 250 | 300 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 300 | 260 | 200 |
| கோவா | 140 | 330 | 300 | 360 |
| கரட் | 250 | 350 | 400 | 400 |
| பூசணி | 250 | 250 | 260 | 300 |
| புடோல் | 160 | 160 | 160 | 240 |
| வாழைக்காய் | 120 | 100 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 350 | 380 | 400 | 450 |
| பெரிய வெங்காயம் | 200 | 200 | 200 | 240 |
| பாகற்காய் | 300 | 350 | 460 | 500 |
| வெண்டக்காய் | 160 | 150 | 140 | 350 |
| கருணைக் கிழங்கு | 160 | 220 | 200 | 250 |
| பயற்றங்காய் | 350 | 250 | 260 | 350 |
| லீக்ஸ் | 220 | 230 | 280 | 300 |
| பீற்றூட் | 250 | 300 | 300 | 350 |
| கறிமிளகாய் | 400 | 400 | 400 | 600 |
| முருங்கைக்காய் | 400 | 350 | 360 | 300 |
| போஞ்சி | 450 | 450 | 400 | 500 |
| கத்தரிதம்புள்ள | 280 | 200 | — | 300 |
| கீரை – 1 பிடி | 100 | 80 | 80 | 80 |
| தேசிக்காய் | 250 | 300 | 400 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 50 | 50-70 |
| இராசவள்ளி | 200 | 300 | 220 | 250 |
| வெங்காயப்பூ | 350 | 350 | 400 | 400 |
| முள்ளங்கி | 160 | 120 | 160 | 200 |
| பொன்னாங்காணி | 60 | 90 | 80 | 60 |
| வல்லாரை | 20 | 80 | 30 | 40 |
| ஈரப்பலா | 80 | 150 | 80 | 140 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அம்புலிமாமா

# மனித இயல்புகள்

(நேற்றைய தொடர்ச்சி)

அப்போது ராஜகுரு “வழிப்போக்கனிடம் மனிதத் தன்மை அரைப்பங்கு உள்ளது. அந்த ஏழையை விடுவித்தானேயொழிய அவனுக்கு வேறு வழி காட்டவில்லையே” என்றார்.

ஒருநாள் அரச சபைக்கு இரு வியாபாரிகள் வந்தார்கள். அவர்கள் தம் பொருட்களுடன் செல்கையில் திருடர்கள் வழிமறித்து அவர்களிடம் இருந்ததைப் பறித்துக் கொண்டு அவர்களை கொல்ல கத்திகளை எடுத்தார்களாம்.

அப் போது திருடர் தலைவன் அவர்களைத் தடுத்து “இப்படிப்பட்டவர்கள் உயிருடன் இருந்தால் தான் நம் தொழில் நடக்கும்” எனக் கூறி அவர்கள் இருவருக்கும் வழிச் செலவுக்கென இரண்டு ரூபாய் கொடுத்து அனுப்பினானாம்.



இதைக் கேட்ட ராஜகுரு “திருடர் தலைவனிடம் முக்கால் பங்கு மனிதத்தன்மை உள்ளது. அவனது நடத்தை அவனை முழு மனிதனாக்கி விடவில்லை” என்றார்.

ஒருநாள் ஒரு அரசாங்க வீரன் இருவரை மன்னன் முன் கொண்டு வந்து நிறுத்தினான். அவர்களில் ஒருவன் பணக்காரன் மற்றவன் ஏழை. வீரன் மன்னனிடம் “அரசே! இந்த ஏழையை இப் பணக்காரன் நீரில் தள்ளி அவனும் அதில் குதித்ததை நான் கண்டேன். நான் கரைக்கு ஓடினேன் அதற்குள் இவர்கள் கரைக்கு வந்து விட்டார்கள்” என்றான்.

மன்னன் பணக்காரனிடம் “ஏன் இந்த ஏழையை நீரில் தள்ளினாய்?” என்று கேட்க அவனும் கூறலானான்: “அரசே! இவன் என்பக்கத்து வீட்டுக்காரன். இவனது நிலத்தை ஆக்கிரமித்தேன். இது அநியாயம் என்று இவன் எல்லோரிடமும் கூறவே நான் கோபம் கொண்டு இவன் குடிசைக்குத் தீ வைத்தேன். அது பற்றிய விசாரணையில் இவனது அஜாக்கிரதையால் தான் குடிசை எரிந்தது என அதிகாரிகளைச் சொல்ல வைத்தேன்.

இன்று குளக்கரையில் என்னைக் கண்ட இவன் “என்னை அடியோடு நாசமாக்கி விட்டாயே” என்று கத்த நான் கோபம் கொண்டு இவனைக் குளத்தில் தள்ளினேன், இவன் என்னைப் பலமாகப் பிடித்துக் கொள்ள இவனோடு சேர்த்து நானும் விழுந்தேன். நான் நீந்தத் தெரியாமல் தத்தளிக்கவே இவனே என்னைக் காப்பாற்றிக் கரை சேர்த்தான்.”

ராஜகுரு அப்பணக்காரனை ஏழைக்கு நஷ்டஈடாக பெருந் தொகை கொடுக்கச் செய்து மன்னனிடம் “பார்த்தாயா! அந்த ஏழை தனக்கு எல்லாவிதத்திலும் கெடுதல் செய்த பணக்காரனை உயிர்போகும் தருணத்தில் காப்பாற்றி அவன் மனதை மாற்றி விட்டான். ஒரு மனிதனை நல்லவனாக மாற்றுபவனே முழு மனிதன்” என்றார்.

ராஜகுரு இப்படிக் கூறிய அறிவுரையை ஏற்று மனிதத் தன்மை என்பது என்ன என்று புரிந்து கொண்டு நாட்டை நன்கு ஆண்டு வந்தான்.

(முற்றும்)

# சிலப்பதிகாரம்

## அன்பளிப்புக்கள்




சீத்தலைச்சாத்தனாரின் புதிர் போன்ற திடீர் கேள்விக்கு என்ன பதில் சொல்வதென்று மன்னனுக்கு சட்டென்று தோன்றவில்லை. இது கேள்வியின் அபத்தமா? கேள்வியே அபத்தமா?

காரணமாகத்தான் கேட்கிறேன். சொல்லுங்கள் அரசே! அப்படி ஒரு நிலைமை வந்தால் அரசி என்ன செய்வார்?

அதை எதிர் கொள்ளும் சக்தி அவளுக்கு இல்லை என்றான் அரசன். என்பால் மிகுந்த காதல் கொண்டிருப்பவள் அவள் ஒன்று தன்னை மாய்த்துக் கொள்வாள், இல்லையென்றால் துறவறம் மேற்கொள்வாள்.

“அல்லது, தன் தமையன் தந்தையின் உதவியுடன் சம்பந்தப்பட்ட பெண்ணை நாட்டை விட்டு ஓடச் செய்யலாம்” என்று சிரித்தார் சாத்தனார்.

ஓடச்செய்வதென்ன, ஒரேயடியாகப் போகக் கூடச் செய்யலாம். அரசரும் பெரிதாகச் சிரித்தார். அவள் தந்தையும் தமையன்களும் வீரப் பரம்பரையில் வந்தவர்கள் ஆனால், கண்ணகி இந்த மூன்றில் எதையுமே செய்யவில்லை.

“அப்படியா? ஆச்சரியமாக இருக்கிறதே பிறகு என்ன செய்தாள் அவள்?

இதற்கு சாத்தனார் விடை சொல்லும் முன்பு சேவகன் ஒருவன் உள்ளே வந்தான். “அரசருக்கு வணக்கம்”

“என்ன விஷயம்?”

“மலைவாழ் மக்கள் காணிக்கைப் பொருள்களோடு தங்களைக் காண வந்திருக்கிறார்கள்”

“வரச்சொல்”

சேவகன் தலை மறைந்ததும் செங்குட்டுவன் பெருமூச்சோடு சாத்தனாரீர் பக்கம் திரும்பினான். “பார்த்தீர்களா சாத்தனாரே. இவர்களைச் செழிப்பாகவும் நிம்மதியாகவும் வாழ வைக்கிற கடமை என்னுடையது எனக்கே காணிக்கையாம் இவர்கள் என்ன குறுநில மன்னர்களா திறை கொண்டு வர? இது வெகுளித்தனமா. மடமையா, லஞ்சமா?”

எதுவுமே இல்லை, அன்பு என்றார் சீத்தலைச் சாத்தனார் பிள்ளைகளைப் படிக்கவைப்பது பெற்றவர்கள் கடமை அவர்கள் வளர்ந்து ஆளானதும் பெற்றவர்களுக்கு அன்பளிப்புகள் வாங்கித் தருவதில்லையா?

எல்லாவற்றுக்கும் ஒரு நியாயம் இருக்கிறது உங்களிடம்!

எழுதுபவர்கள் ஆயிற்றே முரண்பாடான இடங்களில்கூட எங்களால் நியாயத்தைக் காண முடியும்!”

உள்ளே வந்த மலைவாழ் மக்கள் பல அன்பளிப்புகளைக் கொண்டு வந்து குவித்தார்கள். யானைத் தந்தங்கள், மான் தோல், புலித் தோல், வாசனைப் பொருட்கள், மிளகு, கரும்பு, பழங்கள், மேலும் பல உணவுப் பொருட்கள், அழகிய கிளிகள், வளர்ப்புப் பிராணிகள், இன்னும் என்னென்னவோ.

“வணங்குகிறோம் மன்னா” “வாருங்கள் என் இனிய பிரஜைகளே. நான் உங்களுக்குச் செய்ய வேண்டியது எதுவும் உண்டா?”

“மன்னருக்கு வாழ்த்துகள். உங்கள் கருணையால் நாங்கள் நன்றாக இருக்கிறோம் நாங்கள் வந்தது உதவி ஏதும் எதிர்பார்த்து அல்ல”.

“அப்படியா?”

“ஆமாம் அரசே, உங்களுக்குச் சொல்ல எங்களிடம் ஓர் ஆச்சரியமான செய்தி இருக்கிறது

“என்ன அது?”

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தியோடு இருப்பதைவிட
நல்லவனாய் இருப்பதே மேல்!
~ அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கோட்டாவை வெளியேற்றும்வரை பிக்குகள் ஓயமாட்டார்கள்

காலம் பிழைத்தால் கறுத்தார்தான் என்ன செய்ய முடியும் என்று கூறுகின்ற வழமை நம் மத்தியில் உண்டு.

அதேபோன்று காலம் பிழைத்தால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷதான் என்ன செய்ய முடியும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை வீட்டுக்கு அனுப்புவதற்காக ஆரம்பித்த கோட்டா கோ கம போராட்டம் இலக்கு மாறி பிரதமர் மகிந்த ராஜபக்ஷ பக்கம் திசை திரும்பியது.

அதாவது கோட்டாவை வீட்டுக்கு அனுப்புவதற்காகக் காலிமுகத்திடலில் கருக்கட்டிய தாழமுக்கம் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை நோக்கி முழங்கிக் கொட்டித்தள்ள, அந்தச் சந்தர்ப்பத்தைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்ட ஜனாதிபதி கோட்டாபய அண்ணன் மகிந்தவை பிரதமர் பதவியில் இருந்து விலகுமாறு கடும் அழுத்தம் கொடுத்தார்.

மகிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியில் இருந்து விலகுவதன் மூலம் தனது பதவியைத் தக்க வைக்க முடியும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கருதினார்.

ராஜபக்ஷ குடும்ப அரசியலில் கோலோச்சிய மகிந்த ராஜபக்ஷவின் பதவி விலகலுக்கு அவரால் அரசியலுக்குக் கொண்டு வரப்பட்ட தம்பி கோட்டாபய ராஜபக்ஷவே காரணமாக இருந்தார் என்பது மகிந்தவால் ஜீரணிக்க முடியாத விடயம்.

இருந்தும் நாடு பற்றி எரிகிறது. கோட்டாபயவோ தனது பதவியை விடுவதாக இல்லை.

இந்தநிலையில் எதுவும் செய்ய முடியாதவராக மகிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியை இராஜினாமாச் செய்துவிட்டு வீடேகினார்.

இந்தச் சம்பவம் ராஜபக்ஷ குடும்பத்தை கடுமையாகத் தாக்கியது.

அதிலும் குறிப்பாக மகிந்த ராஜபக்ஷவின் மனைவி மற்றும் பிள்ளைகளை அவரின் பதவி விலகல் கடுமையாகப் பாதித்திருந்தது.

இந்தநிலையில் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருக்கும்வரை ஒருபோதும் பிரதமர் பதவியைப் பொறுப்பெடுக்கமாட்டேன் என்று அறுதியாக சஜித் பிரேமதாஸ கூறிவிட,

எந்த நிபந்தனையையும் விதிக்காத ரணில் விக்கிரமசிங்க பிரதமரானார்.

ஆனால் அவரால் நாட்டை நிமிர்த்த முடியவில்லை. ஜனாதிபதி கோட்டா இருக்கும் வரை உலக நாடுகள் ரணிலுக்கும் உதவி செய்யமாட்டா என்ற க்ட்டத்தில், நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலைமை மேலும் மோசமாகியது.

இந்த இடத்தில்தான் பௌத்த பிக்குகள் சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பது உள்ளிட்ட முக்கிய விடயங்களை முன்வைத்து ஜனாதிபதி கோட்டாபயவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தனர்.

ஆனால் அந்தக் கடிதத்தை ஜனாதிபதி கோட்டா பொருட்படுத்தாமல் விட்டுவிட, அதனால் ஆத்திரமடைந்த பௌத்த பிக்குகள் எப்படியும் கோட்டாவை வீட்டுக்கு அனுப்புவது எனக் கங்கணம் கட்டி புறப்பட்டுள்ளனர்.

பௌத்த பிக்குகளின் இந்தப் புறப்பாடு கோட்டாவை ஒரு முடிவுக்கு கொண்டுவராமல் ஓயமாட்டாது என்பதை மட்டும் இங்கு அறுதியிட்டுக் கூறமுடியும்.

# எரிபொருளை பங்கீட்டு முறையில் வழங்குவதற்கு நடவடிக்கை

### யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர்

(யாழ்ப்பாணம்)

எரிபொருள் நெருக்கடிகள் குறித்து அதனை பங்கீட்டு முறை அடிப்படையில் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்திருந்தார்.

நேற்றைய தினம் யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே தெரிவித்திருந்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

பொது மக்களுக்குத் தேவையான எரிபொருளினை பங்கீட்டு அட்டை மூலம் வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

எரிபொருளிற்காக காத்திருக்கின்ற மக்கள் அனைவரையும் பதிவு செய்து இலக்கங்களை வழங்கி எரிபொருள் கிடைக்கின்ற நிலைமைக்கு ஏற்ப எரிபொருள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

செயலி ஒன்றினை அறிமுகப்படுத்தி அந்தச் செயலி மூலம் தங்களுடைய தேவைகளை பதிவு செய்து SMS ஊடாக எரிபொருள் வழங்க இருக்கின்ற தினத்தினைப் பெறக்கூடிய வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த செயலியினை பயன்படுத்த முடியாதவர்கள் தங்கள் கிராம உத்தியோகத்தர் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர் ஊடாக பெற்று பயன்படுத்துவதற்குரிய முன்னேற்பாடுகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

பெரிதும்.சிறியதுமான தொழில் துறையில் இருப்பவர்களுக்கும் எரிபொருள் பகிர்ந்தளிக்க வேண்டி இருக்கிறது.

கொள்கலனில் எரிபொருளினை பெறுவதற்கான தடை இருக்கின்ற காரணத்தினால் அதற்குரிய விசேட ஏற்பாடுகளை இன்றிலிருந்து ஆரம்பிக்க முன்னெடுத்திருக்கின்றோம்.

மண்ணெண்ணெய் விநியோகம் தற்போது தடைப்பட்டுள்ளது. ஏற்கனவே கிடைத்திருக்கின்ற மண்ணெண்ணெயினை பங்கீட்டு அடிப்படையில் விநியோகத்திருக்கின்றோம்.

விவசாயிகளுக்கு கமநல அமைப்புக்கள் ஊடாகவும் மீன்பிடியாளர்களுக்கு மீன்பிடியாளர் கூட்டுறவுச்சங்கங்கள் ஊடாகவும் விநியோகித்திருந்தோம்.

தொடர்ச்சியாக வழங்கக்கூடிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். தற்போது இதற்கான கோரிக்கைகளை எழுத்து மூலமாக அனுப்பி வைத்திருக்கின்றோம். இருந்தபோதும் இது சவால் மிக்கதாக உள்ளது என்றார். (ம-7,33,104)

## ஓமந்தை எரிபொருள் நிலையத்திற்கு அருகில்

### வாள்களுடன் மூவர் கைது

(வவுனியா)

வவுனியா ஓமந்தை எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கருகில் வாள்களுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது,

ஓமந்தை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருளினை பெற்றுக் கொள்வதற்காக மக்கள் நீண்ட வரிசையில் வீதியிலே பல நாட்களாக காத்திருக்கின்றனர்.

இந்நிலையில் இளைஞர் குழுவினர் ஒன்றிணைந்து புதிதாக ஒரு புதிய வரிசையினை ஏற்படுத்தியதுடன், நேற்றையதினம் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொர்ருள் விநியோகிக்கப்பட்டபோது தங்களது வரிசையினருக்கே எரிபொருளினை வழங்க வேண்டும் என தெரிவித்து சண்டையில் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையில் சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் நிலைமையினை கட்டுக்குள் கொண்டு வந்திருந்ததுடன், சம்பவத்துடன் தொடர்புடைய மூவரை கைது செய்துள்ளதுடன் காரில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வாள்கள் மற்றும் பொல்லுகளினை மீட்டிருந்தனர்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் ஓமந்தை பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (ம-7,299)

## தனியார் மருந்தகங்கள் அனைத்தும் இன்று மூடப்படும்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து தனியார் மருந்தகங்களும் இன்று மூடப்படும் என அகில இலங்கை தனியார் மருந்தக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

மருந்துகளுக்கான தட்டுப்பாடு மற்றும் போக்குவரத்து சிரமம் காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அச்சங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, அரச வைத்தியசாலைகளில் சேவைகள் தடையின்றி முன்னெடுக்கப்படும் அதேவேளை, தனியார் மருத்துவ சிகிச்சை நிலைய சேவைகளை இன்று தவிர்ப்பதற்கு மருத்துவ நிபுணர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது. (ம-7)

## ரூ.2,500 படி 40 லீற்றர் டீசல் விற்பனை

### வவுனியாவில் ஒருவர் கைது

(வவுனியா)

வவுனியாவில் 2,500 ரூபாய் படி 40 லீற்றர் டீசல் எரிபொருளை விற்பனை செய்த நபர் ஒருவரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று பிற்பகல் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வவுனியா, பட்டானிச்சூர் பகுதியில் வசித்து வந்த 31வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளின் பின் குறித்த இளைஞரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ம-7,250)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



### மனம் ஒரு குளம் போன்றது

❖ ஒரு மனிதனுடைய குணத்தை இந்த சம்ஸ்காரங்கள் மொத்தமுமே நிர்ணயிக்கின்றன. நல்ல சம்ஸ்காரங்கள் மேலோங்கி இருந்தால் குணம் நல்லதாக அமைகிறது. தீயவை மேலோங்கி இருந்தால் குணம் தியதாக அமைகிறது.

❖ ஒரு மனிதன் தொடர்ந்து தீய வார்த்தைகளைக் கேட்டு தீய எண்ணங்களையே எண்ணி, தீய செயல்களையே செய்து கொண்டிருந்தால் அவனுடைய மனம் தீய சம்ஸ்காரங்களில் நிறைகிறது. அவை அவனுடைய சிந்தனையையும் செயலையும் அவன் அறியாமலே ஆட்டிப்படைக்கின்றான.

❖ உண்மையில் இந்தத் தீய. சம்ஸ்காரங்கள் தொடர்ந்து செயற்பட்டவாறே இருக்கின்றன. அவற்றின விளைவு தீமையாகத்தான் இருக்கும். அதன் காரணத்தால் அந்த மனிதன் தீயவனாக இருக்கிறான். அவனால் இதைத் தவிர்க்க முடியாது. இந்த சம்ஸ்காரங்கள் மொத்தமும் தீய செயல்களைச் செய்வதற்கான ஆற்றல் மிக்கதொரு தூண்டு சக்தியை அவனுள் உருவாக்கும். தன் சம்ஸ்காரங்கள் மொத்தமும் தீய செயல்களைச் செய்வதற்கான ஆற்றல் மிக்கதொரு தூண்டு சக்தியை அவனுள் உருவாக்கும். தன் சம்ஸ்காரங்களின் கையில் மனிதன் எந்திரம் போலாகி விடுகிறான். அவை அவனை தீமை செய்யும்படி கட்டாயப்படுத்துகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 27

**உக்ரைன்- செர்னோபில் அணு மின் நிலையத்தில் ஒரு அணு உலை வெடிப்பும் பேரழிவும் (1986)**

செர்னோபில் பேரழிவு என்பது 26 ஏப்ரல் 1986 அன்று சோவியத் யூனியனில் உள்ள உக்ரைனிய SSR க்கு வடக்கே உள்ள ப்ரிபியாட் நகருக்கு அருகில் உள்ள செர்னோபில் அணுமின் நிலையத்தின் எண். 4 அணு உலையில் நிகழ்ந்த அணு விபத்து ஆகும். இது செலவிலும் உயிரிழப்புகளிலும் வரலாற்றில் மிக மோசமான அணுசக்தி பேரழிவாகக் கருதப்படுகிறது.

செர்னோபிள் அணு சக்தி நிலையத்தில் ஏற்பட்ட இவ் வெடி விபத்தால், கதிரியக்கம் கொண்ட துகள்கள், 1,55,000 சதுர கிலோமீற்றர் அளவுக்கு பரவி, ரஷ்யா, பெலாருஸ் மற்றும் உக்ரைன் ஆகிய நாடுகளில் பாதகமான விளைவுகளை உருவாக்கின என்று ஐ.நா. வெளியிட்டுள்ள அறிக்கையொன்று கூறுகிறது.

முப்பதுக்கு மேற்பட்ட ஆண்டுகள் கடந்த பின்னரும், செர்னோபிள் விபத்தின் தாக்கங்கள் இன்னும் உணரப்பட்டு வருகின்றன என்றும், இதனால் பாதிக்கப்பட்டுள்ள சமுதாயங்களுக்கு, தொடர்ந்து உதவிகள் தேவைப்படுகின்றன என்றும், ஐ.நா. வெளியிட்ட அறிக்கை கூறுகிறது.

இந்த விபத்தின் காரணமாக, 84 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டனர் என்பதும், 52, 000 சதுர கிலோமீற்றர் பரப்பளவுள்ள நிலங்கள் பாழாயின என்பதும் குறிப்பிடத்தக்கன.

சர்வதேச அணுசக்தி நிகழ்வு அளவுகோலில் ஏழு அணுசக்தி விபத்துக்களில் இதுவும் ஒன்று. இதனால் ஏற்பட்ட சுற்றுச்சூழல் தூய்மையாக்கலுக்கு 500,000 க்கும் அதிகமான பணியாளர்களை ஈடுபடுத்தியதோடு 18 பில்லியன் சோவியத் ரூபிள் செலவாகியது.

**செர்னோபில் பேரழிவு எனபது 26 ஏப்ரல் 1986 அன்று சோவியத் யூனியனில் உள்ள உக்ரைனிய SSR க்கு வடக்கே உள்ளப்ரிபியாட் நகருக்கு அருகில் உள்ள செர்னோபில் அணுமின் நிலையத்தின் எண். 4 அணு உலையில் நிகழ்ந்த அணு விபத்து ஆகும். இது செலவிலும் உயிரிழப்புகளிலும் வரலாற்றில் மிக மோசமான அணு சக்தி பேரழிவாகக் கருதப்படுகிறது.**

அணு உலை வெடிப்பின் காரணமாக கதிர்வீச்சு அண்டை நாடுகளுக்கும் பரவியது. இப்போதும் அணு உலை அமைந்துள்ள இடத்தில் பல பகுதிகள் பாதுகாக்கப்பட்ட இடமாகத்தான் உள்ளன. கைவிடப்பட்ட அந்த பகுதியில் சூரிய சக்தி ஆலையை உக்ரைன் அமைத்துள்ளது. செர்னோபிள் அணு உலை 2000 ஆம் ஆண்டு மூடப்பட்டது. விபத்துக்கு உள்ளான அந்த குறிப்பிட்ட பகுதியில் 24,000 ஆண்டுகளுக்கு மக்கள் வசிக்க முடியாது என்று கூறப்படுகிறது.

**செர்னோபிள் அணுமின் நிலையத்தில் கதிர்வீச்சு கசியும் அபாயம்: உக்ரைன் (2022)**

**மின் நிலையத்திற்கு செலுத்தப்படும் உயர் மின்னழுத்த இணைப்பு துண்டிக்கப்பட்டதாக உக்ரைன் தெரிவித்து, அதனால் செர்னோபிள் அணுமின் நிலையத்திலிருந்து கதிர்வீச்சு கசியும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக கூறியது.**

இது தொடர்பாக, டெலிகிராம் செயலியில் அந்நிறுவனம் வெளியிட்ட பதிவில், இரு வாரங்களுக்கு முன் செர்னோபிள் அணுமின் நிலையத்தை ரஷ்யா கைப்பற்றிய போது ஏற்பட்ட சேதத்தால், அணு மின் நிலையத்திற்கு செலுத்தப்படும் உயர் மின்னழுத்த இணைப்பு துண்டிக்கப்பட்டதாக தெரிவித்திருந்தது.



சேதமடைந்த செர்னோபில் அணுமின் நிலையம்

செர்னோபிள் அணுமின் நிலையத்திலிருந்து கதிர்வீச்சு கசியும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக, உக்ரைன் 2022-03-09 ஆம் திகதி எச்சரித்திருந்தது. (குறிப்பு- ஆற்றல்-உருவாக்கும் செயற்பாட்டில், அணு உலையில் அதன் எரிபொருள் தண்டுகளால் உருவாக்கப்படும் வெப்பத்தின் பெரும் பகுதி அணுக்கரு பிளவில் இருந்து பெறப்படுகிறது, ஆனால் கணிசமான பகுதி (6% க்கு மேல்) திரட்டப்பட்ட பிளவு பொருட்களின் கதிரியக்க சிதைவிலிருந்து பெறப்படுகிறது. அணு உலை நிறுத்தப்பட்டாலும் இக் கசிவு தொடர்ந்திருக்கும். இவ் வெப்பத்தைத் தடுக்க குளிரூட்டல் சுழற்சி இன்றியமையாதது).

உக்ரைனிய அரசு நடத்தும் அணுசக்தி நிறுவனமான எனர்கோவடோம் (Energoatom) நிறுவனம், செர்னோபிள் அணு மின் நிலையத்தில் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது எனவும், இதனால், பயன்படுத்தப்பட்ட அணு எரிபொருளை குளிர்விக்க முடியாது என்பதால், அங்கு கதிர்வீச்சு கசிவு ஏற்படலாம் என 2022-03-09 ஆம் திகதி எச்சரித்திருந்தது.

**2022ம் ஆண்டு மார்ச் மாதத்தில் செர்னோபிள் அணுமின் நிலையத்தை ரஷ்யா கைப்பற்றிய போது ஏற்பட்ட சேதத்தால், அணு**

அணுமின் நிலையத்தின் கண்காணிப்பு தகவல்களை உக்ரைனால் அணுக முடியாது எனவும், இதனால், அங்கு கதிர்வீச்சு கசிவு ஏற்பட்டுள்ளதா என்பது குறித்து ஆராய முடியாது எனவும், உக்ரைனின் எரிசக்தித்துறை அமைச்சர் ஜெர்மன் கலூஷ்சென்கோ பிபிசியிடம் தெரிவித்தார்.


"எவ்வளவு விரைவாக முடியுமோ, இதனை சரி செய்ய வேண்டும்" என அவர் தெரிவித்தார். ஆனால், "மின் இணைப்பு துண்டிக்கப்பட்டால் செயற்படுவதற்கென சிறப்பு பாதுகாப்பு அமைப்பு உள்ளது" எனவும், இதன்மூலம் டீசல் ஜெனரேட்டர்கள் மூலம் சில தினங்களுக்கு அணுமின் நிலையத்திற்கு மின் இணைப்பை வழங்க முடியும் எனவும், அவர் தெரிவித்தார்.

செர்னோபிள் அணுமின் நிலையத்திலிருந்து கண் காணிப்பு தகவல்களை பெறுவது நின்று விட்டதாக, சர்வதேச அணுசக்திக் கழகம் முன்னதாக தெரிவித்திருந்தது. மேலும், கடந்த இரு வாரங்களாக அந்த அணு மின் நிலையத்தில் உள்ள சுமார் 210 பணியாளர்கள் தொடர்ந்து பணியில் ஈடுபட்டு வருவதாக உக்ரைன் அதிகாரிகள் தெரிவித்திருந்ததாகவும் அந்த [illegible]திருந்தது.

மார்ச் 31, 2022 அன்று, ரஷ்யப் படைகள் செர்னோபில் அணு ஆலையின் கட்டுப்பாட்டை அதன் ஊழியர்களிடம் முறையாக ஒப்படைத்தன, மேலும் பெரும்பாலான ரஷ்ய ஆக்கிரமிப்புப் படைகள் வெளியேறின. உக்ரைனிய தேசியக் காவலர்கள் போர்க் கைதிகளாக பெலாரசுக்கு மாற்றப்பட்டனர். 2 ஏப்ரல் 2022 அன்று உக்ரைனிய ஊடகங்கள் ஆலையில் உக்ரைனின் கொடி உயர்த்தப்பட்டதாக அறிவித்தன. ரஷ்ய துருப்புக்கள் செர்னோபில் விலக்கு மண்டலத்தின் மிகவும் அசுத்தமான பகுதியில் அகழிகளை தோண்டியதாகவும் இதனால் குறிப்பிடத்தக்க அளவு கதிர்வீச்சு உருவாகி இருப்பதாகவும் செர்னோபில் நடத்துனர் (Chernobyl operator) எனர்காட்டம் **(Energoatom)** கூறினார்.

**சோவியத் ஒன்றியத் தலைவர் மிகைல் செர்ஜிவிச் கோர்பச்சேவ் காலம் (1985-1991)**

மிகைல் செர்ஜியேவிச் கோர்பச்சேவ் ஒரு ரஷ்ய மற்றும் முன்னாள் சோவியத் அரசியல்வாதி. சோவியத் ஒன்றியத்தின் எட்டாவது மற்றும் இறுதித் தலைவர், அவர் 1985 முதல் 1991 வரை சோவியத் ஒன்றியத்தின் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்தார். அவர் 1988 முதல் 1990 வரை சோவியத் ஒன்றியத்தின் அரச தலைவராகவும் 1990 முதல் 1991 வரை சோவியத் ஒன்றியத்தின் (ஒன்றியம் கலைக்கப்படும் வரை) ஜனாதிபதியாகவும் பணியாற்றினார். இவரது சில சீர்திருத்தக் கொள்கைகள் பனிப் போரை முடிவுக்குக் கொண்டு வந்தன எனப்படுகிறது. இவருக்கு 1990இல் அமை



சோவியத் ஒன்றியத் தலைவர் மிகைல் செர்ஜிவிச் கோர்பச்சேவ் (1985-1991)

திக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.கோர்பச்சேவின் தலைமைத்துவ பாணி அவரது முன்னோடிகளிடமிருந்து வேறுபட்டது. அவர் தெருவில் குடிமக்களுடன் பேசுவதில்லை, 1985 சிவப்பு சதுக்க விடுமுறைக் கொண்டாட்டங்களில் அவரது உருவப்படத்தைக் காட்டுவதைத் தடை செய்தார், மேலும் பொலிட்பீரோ கூட்டங்களில் வெளிப்படையான மற்றும் வெளிப்படையான விவாதங்களை ஊக்குவித்தார்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பலத்தைப் பயன்படுத்த பாதுகாப்புத் தரப்புக்கு அனுமதி

## பாதுகாப்புச் செயலர்



(கொழும்பு)

வன்முறைகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக தேவையான பலத்தைப் பயன்படுத்த படைத் தரப்புக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாக பாதுகாப்புச் செயலர் கமால் குணரத்ன தெரிவித்துள்ளார்.

பொதுமக்களுக்கு ஆபத்தை விளைவிப்பவர்கள் அல்லது தீங்கு விளைவிப்பவர்கள், சமூக விரோத செயல்களில் ஈடுபடுபவர்கள், சொத்துக்களுக்குச்சேதம்விளைவிப்பவர்களுக்கு எதிராக தேவையான பலத்தை பயன்படுத்த பொலிஸ், இராணுவத்தினருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

## எரிபொருள்...

தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

காலி - மாகல்ல எரிபொருள் நிரப்பு நிலையமொன்றில் வரிசையில் காத்திருந்த இரு குழுக்களுக்கு இடையிலேயே இந்த மோதல் சம்பவம் இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

25 வயதுடைய இளைஞன் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (ம-7)

## ஆர்ப்பாட்டங்கள்...

துள்ளார்.

அமைதியான ஆர்ப்பாட்டங்களிற்கு தடையேற்படுத்தப் போவதில்லை என பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இன்று கொழும்பிலும் புறநகர் பகுதி களிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் நடைபெறவுள்ள ஆர்ப்பாட்டங்கள் குறித்து சமூகஊடகங்களில் தகவல்கள் பரிமாறப்படுவதை அவதானித்துள்ளோம் என தெரிவித்துள்ள பொலிஸ் பேச்சாளர் பொதுமக்கள் ஆர்ப்பாட்டங்களிற்காக கொழும்பிற்கு வருவார்கள் என புலனாய்வு பிரிவுகள் தெரிவித்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அமைதியான முறையில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதற்கு உள்ள உரிமைகளை பொதுமக்கள் பயன்படுத்துவதில் பொலிஸாருக்கு பிரச்சினை எதுவுமில்லை என தெரிவித்துள்ள பொலிஸ் பேச்சாளர் எனினும் இந்த ஆர்ப்பாட்டங்கள் வன்முறை மிகுந்தவையாக மாறினால் பொலிஸார் சட்ட கட்டமைப்பிற்குள் நடவடிக்கை எடுப்பதற்கு நிர்ப்பந்திக்கப்படுவார்கள் எனவும் தெரிவித்துள்ளார். (ம-7)

## அமைதியான...

வித்துள்ளார்.

டுவிட்டர் பதிவினூடாக அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அமைதியான எதிர்ப்பாளர்களுக்கு இடம் மற்றும் பாதுகாப்பை வழங்குமாறு இலங்கை இராணுவம் மற்றும் பொலிஸாருக்கு நினைவூட்டுவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

குழப்பமும் பலமும் பொருளாதாரத்தை சரி செய்யாது அல்லது இலங்கையர்களுக்கு தற்போது தேவையான அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## மேல் மாகாணத்...

மூலம் இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நீர்கொழும்பு, களனி, நுகேகொடை, கல்கிசை, கொழும்பு வடக்கு, கொழும்பு மத்தி மற்றும் கொழும்பு தெற்கு ஆகிய பொலிஸ் பிரிவுகளுக்குட்பட்ட பகுதிகளுக்கு பொலிஸ் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## கலவரங்கள்...

அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகும் வரை அரச தலைவர் மாளிகையை இன்று சுற்றி வளைத்து அங்கேயே தங்கியிருப்போம் என ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ஷவை பதவி விலகுமாறு கோரி ஐக்கிய மக்கள் சக்தி இன்று பாரிய ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளது.

குறித்த ஆர்ப்பாட்டமானது கோட்டை தொடருந்து நிலையத்தில் ஆரம்பமாகி பின்னர் அரச தலைவர் மாளிகையை நோக்கி பேரணியாகச் செல்லவுள்ளது.

இந்நிலையில், அரச தலைவர் பதவி விலகும் வரை அரச தலைவர் மாளிகையிலேயே தங்கி இருப்போம் என கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான ராஜித சேனாரத்ன மற்றும் முஜிபுர் ரஹ்மான் ஆகியோர் நேற்று செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தனர்.

இவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் ஊரடங்குச் சட்டத்தை மீறி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான இறுதிப் போரில் இணையுமாறு அனைத்து மக்களையும் நாங்கள் அழைக்கிறோம் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

உயர் அதிகாரிகளின் உத்தரவுகளைப் பின்பற்ற வேண்டாம் என்று போராட்டத்தில் பங்கேற்குமாறும் பாதுகாப்புப் படையினரையும் பொலிஸாரையும் கேட்டுக்கொள்கிறோம் என்றும் மத்தும பண்டார கூறினார். (ம-7)

## கோட்டா - ரணில்...

வர்கள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்ட போராட்டத்தைக் கலைக்கும் நோக்கில் நேற்று மாலை போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் கண்ணீர் புகை பிரயோகம் மேற்கொண்டதுடன், நீர்த்தாரை பிரயோகத்திலும் ஈடுபட்டனர்.

உலக வர்த்தக மையத்திற்கு அருகில் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் பேரணி மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

களனி பல்கலைக்கழகத்திற்கு முன்பாக நேற்று ஆரம்பமான மாணவர் பேரணி ஜனாதிபதி செயலகத்தை நெருங்கிய நிலையிலேயே தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இன்று 09ஆம் திகதி சனிக்கிழமை அரசாங்கத்திற்கு எதிராக இடம்பெறவுள்ள மாபெரும் ஆர்ப்பாட்டத்திற்கு வலுச்சேர்க்கும் விதமாக நேற்று அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினரின் ஆர்ப்பாட்டம் மற்றும் பேரணி கொழும்பில் இடம்பெற்றது. (ம-7)

## சட்டத்...

உரிமைகளை மீறும் செயல் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் முக்கிய அறிவிப்பொன்றினை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர், ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் விசேட அறிக்கையொன்றினை வெளியிட்டு ஊரடங்கு உத்தரவு சட்டத்திற்கு முரணானது எனவும் அறிவித்துள்ளார்.

இலங்கை சட்டத்தில் “பொலிஸ் ஊரடங்கு” என்று எதுவுமே கிடையாது. கொழும்பு உள்ளிட்ட மேல் மாகாணத்தின் ஏழு பகுதிகளில் பிறப்பிக்கப்பட்டுள்ள பொலிஸ் ஊரடங்கு உத்தரவு இன்று நடைபெற இருக்கும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை தடுப்பதற்காக பிறப்பிக்கப்பட்டுள்ள சட்டவிரோத அறிவிப்பு என பாராளுமன்ற உறுப்பினர், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். (ம-7)

## பௌத்த மகா...

வழங்குமாறு கட்சிகளிடமும் குறித்த பிரகடனம் ஊடாக கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம-7)


தன நிதானய
திகதி - 2022.07.08
சீட்டிழுப்பு இலக்கம் - 840
M 02 29 52 68

மஹஜன சம்பத
திகதி 2022/07/08
சீட்டிழுப்பு இலக்கம் 4810
E 0 8 6 6 5 5

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2022.07.08
சீட்டிழுப்பு இலக்கம் 119
கன்னி 02 09 26 28 கன்னி

மெகா பவர்
திகதி 08/07/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1158
W 11 28 46 57 70

கொவிசெத
திகதி 2022.07.08
சீட்டிழுப்பு இலக்கம் 3052
K 14 22 23 36
தேசிய லொத்தர் சபை

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 08/07/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1288
கன்னி 3 0 0 4 1 2

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1785 நிறம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2022.07.08 தினம் வெள்ளிக்கிழமை
P 10 29 74 76
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,069,560/-

சனிதா
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.07.08
சீட்டிழுப்பு இல : 3946
வர்ணம் : செம்மஞ்சள்
ரூ. 2,660,120/-
10 14 27 42 S

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 193
சீட்டிழுப்பு திகதி 2022.07.08
வெள்ளிக்கிழமை
02 24 27
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,472,920/-

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,740,980/-
திகதி 2022-07-08
வெற்றி வாரம் 3497
வர்ணம் நீலம்
20 23 28 34 மீனம்
ரூ. 6,943,200/-

12 லக்ன
D 33 16 19 53 72
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 247,181,437/-
961
2022.07.08 வெள்ளிக்கிழமை
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk

அத கோடிபதி
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1611
சீட்டிழுப்பு திகதி : 2022.07.08
ரூ. 2,922,920/-
16 55 69 76 S


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 03 . 04 . 1926

ஆண்டவன் அடியில் 08 . 07 . 2014



## அமரர் சின்னட்டியன் பசுபதி

திதி : வளர்பிறை ஏகாதசி

09.07.2022

அன்பு உள்ளம் கொண்டு அன்போடு அரவணைத்து இன்முகம் காட்டி ஈர்க்கும் குணம் கொண்ட அன்பின் திருவுருவே கருணை நிறைந்த உங்கள் முகம் காணக் கவலையுடன் தேடி நாம் அலைகின்றோம். உங்கள் பூதவுடல் மண்ணோடு மறைந்து விட்டாலும் உங்கள் நினைவுகள் எங்கள் இதயங்களிலிருந்து அழியாது. நீங்கள் மறைந்து எட்டு வருடங்களென்ன எண்பது வருடங்கள் கடந்தாலும் உங்கள் நினைவில் அனுதினமும் ஆத்ம சாந்திக்காக நாவலம்பதி ஞான வயிரவப் பெருமானை வேண்டுகின்றோம்.

அமரரின் எட்டாம் ஆண்டு நினைவாக இன்று நண்பகல் 12 மணிக்கு தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய மண்டபத்தில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் அன்னதானமும் இடம்பெறும். அத்துடன் அமரர் சின்னட்டியன் பசுபதி ஞாபகார்த்த நிதியத்தினால் கடந்த 2021 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த அமரரின் பூட்டப்பிள்ளையான

**சாம்பசிவம் அஸ்விதா - யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை 169 புள்ளி**

இவருடன் சித்தியடைந்த

**மதியழகன் கவீன் - யாழ். இந்து ஆரம்ப பாடசாலை 171 புள்ளி**
**ஜெயராசா மானஸ்தா - யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை 155 புள்ளி**
**ரமேஸ் தனுசியன் - உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம் 151 புள்ளி**
**கோணேஸ்வரன் ஷதுர்ஜிகா - கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை 150 புள்ளி**

ஆகியோர் நிதி உதவி வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் பாசத்தினால் வாடும்
குடும்பத்தினர்

(12086)

# கண்ணீர் அஞ்சலி

இணுவில் மேற்கு கந்தசுவாமி கோவிலடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

திருமதி

## விபுலானந்தராசா தம்பிரத்தினசோதி



அவர்கள் காலமான செய்தியறிந்து ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**இணுவையூர் முருகஜீவ அறக்கட்டளை**
**யாழ்ப்பாணம், இலங்கை.**

(C-4591)


# நீர்க்கசிவினை நிரந்தரமாக நிறுத்துவதற்கு

உங்கள் வீடுகள், கட்டடங்கள், கோவில்கள், கடைகள் (மொட்டை மாடிகள், தண்ணீர்த்தொட்டி, வில்லுமண்டபம், முகட்டுக்கூரைகள், வெளிப்புறச் சுவர்கள், மேல்மாடி குளியல் அறைகள், நீரோடிகள்), வெடிப்புகள், நீர்க்கசிவுகளை உத்தரவாதச் சான்றிதழுடன் நிவர்த்தி செய்து தருகிறோம்.

மேலும் மாபிள் பதிக்கப்பட்ட குளியல் அறைகளில் ஏற்படும் நீர்க்கசிவுகளை மாபிளை உடைத்து சேதப்படுத்தாமல் சிறந்த இரசாயனங்கள் மூலம் நீர்க்கசிவினை நிறுத்தித் தருகிறோம்.

**Skyline Water Proofing**

1 சதுர அடி ரூ.200/-... முதல்

No.89, Old Park Road, Jaffna, Sri Lanka.
077 722 0095/076 663 6481/021 221 4994
கிளிநொச்சி/முல்லைத்தீவு - 077 741 4960
வவுனியா / மன்னார் - 077 279 0743

(12089)



# யாழ்ப்பாணத்தில் இயங்கும்

50 (1972 2022) வருட அனுபவத்தைக் கொண்ட

**Baby Photo**

PRINTING SOLUTIONS
91, Palaly Road, Thirunelvely, Jaffna.
021 222 6912, 0761419308

Opening Ceremony
Saturday
09.07.2022
am
9.00 - 11.00

**Baby Photo நிறுவனமும் அதன் இணை நிறுவனமாகிய Arissona நிறுவனமும் அதி உயர் Digital தொழில்நுட்பத்துடன் ஆரம்பமாகின்றது...**

ARISSONA (PVT) LTD
ADVERTISING & PUBLICATION
93, Palaly Road, Thirunelvely, Jaffna.
021 222 3222, 076 141 9307
www.arisona.com | info.arisona.com

எமது நிறுவனங்களின்

## திறப்பு விழா

சனிக்கிழமை 09.07.2022
காலை 9.00 முதல் 11.00 வரை

## விசேட சலுகை

- அல்பம் பிறிண்ட் செய்பவர்களுக்கு தங்களுடைய Studio பெயர் பதித்த Pendrive, Mug இலவசமாக வழங்கப்படும்.

இந்தச் சலுகைகள் குறித்த தினத்தில் மட்டும் வழங்கப்படும்.

- அல்பம் பிறிண்ட் செய்பவர்களுக்கு 10% விசேட விலை சலுகை வழங்கப்படும்.

நிபந்தனைகளுக்குட்பட்டது.

(C-4588)




இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.07.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org